விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 02 திங்கட்கிழமை (15.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

# இலங்கைத் தமிழர்களுக்கு

# அரசியல் அதிகாரம் சந்தேகமே!

**இலங்கை வந்த இந்திய எம்.பி பேட்டி**



இலங்கை தமிழர்களுக்கு மகிந்த அரசு அரசியல் அதிகாரங்களை வழங்குவது சந்தேகமே. அங்குள்ள தமிழர்கள் எல்லாம் அச்சஉணர்வுடனேயே உள்ளனர். இந்தவிடயத் தில் இந்தியா தலையிட்டு ஏதாவது செய்யாதா? என எதிர்பார்க்கின்றனர் என்று இலங்கை வந்து சென்ற திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி.சவுகதா ராய் தெரிவித்துள்ளார்.

இந்திய எம்.பிக்கள் குழு சமீபத்தில் இலங்கை வந்திருந்தது. இந்தக் குழுவில் சந்தீப் தீட்சித் (காங்.), பிரகாஷ் ஜவடேகர், அனுராக சிங் தாக்கூர் (பா.ஜ), தனஞ்ஜெய் சிங் (பகுஜன் சமாஜ்) மற்றும் மம்தா பானர்ஜியின் திரிணாமூல் காங். எம்.பி சவுகதா ராய் ஆகிய ஐந்து பேர் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கை பயணம் முடித்து இந்தியா திரும்பியுள்ள இவர்களில் திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி சவுகதா ராய் இந்தியாவில் செய்தியாளரிடம் கூறுகையில், (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-இலங்கை உறவில் பாதிப்பு இல்லை!

இலங்கையுடனான உறவு தொடர்பில் போட்டித்தன்மை எதுவும் இல்லை என்று இந்தியாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சின் பேச்சாளர் சஹிட் அக்பாருடீன் தெரிவித்துள்ளார்.

பிஸினஸ் ஸ்ரான்டர்ட் என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதன்போது, சீனா-இலங்கையுடன் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்பியுள்ள நிலையில் அது இந்தியாவுக்கு சவாலாக அமையாதா என்று பேட்டி கண்ட ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் நீண்டகால (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு என்னை திருப்பியனுப்ப வேண்டாம்

### தோழி இசைப்பிரியாவுக்கு நடந்த கதியே எனக்கும் நேரும் லோகினி ரதிமோகன் கெஞ்சல்





லோகினி

(டுபாய்) தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளர் லோகினி ரதிமோகன், தாம் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்படலாம் எனவும் அதனால் தன்னை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 18ஆயிரம் சிங்கள குடும்பங்களை வடக்கில் குடியேற்ற அரசு திட்டம்!

வட மாகாணத்தில் எதிர்வரும் யூன் மாதத்திற்கு முன்னர் 18 ஆயிரம் தென்பகுதி சிங்கள குடும்பங்களை குடியமர்த்தவும் அவர்களுக்கு பிரத்தியேகமாக நிரந்தர வீடுகளையும் காணிகளையும் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.


ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான விசேட தூதுவரின் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட உயர்மட்ட அதிகாரிகளின் கலந்துரையாடலிலேயே இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கலந்துரையாடலில் இவ்வாறு குடியேற்றப்பட உள்ளவர்களுக்கான பிரத்தியேகமான வீட்டுத் திட்டம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் இருந்து ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

குடியேற்றப்படவுள்ள தென்பகுதிப் பெரும்பான்மையினரின் குடும்பங்களின் விபரங்களையும் வீட்டுத் திட்டம் தொடர்பான விபரங்களையும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் குடியேற்றத்திற்கான ஒழுங்கமைப்பு வேலைகளை கவனிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த விரைவில் சீனா பயணம்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாத இறுதியில் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனை (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராணி பதவி நீக்கம் சட்ட விரோதமானது

முன்னாள் பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டமை சட்ட விரோதமானது என சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது. சர்வதேசசட்டத்தரணிகள்பேரவையின் அண்மைய அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பட்டார நாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்டதன் மூலம் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான மக்கள் நம்பிக்கை வலுவிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நீதிமன்றத்தின் சுயாதீன தன்மையும் சட்டத்துறையின் மீதான மக்கள் நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் வகையிலேயே அரசாங்கம்செயற்படவேண்டும்என அவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (செ-11)

## புதுவருட கொண்டாட்ட விபத்துக்கள்

# கொழும்பு வைத்தியசாலையில் 250 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

கொழும்பில் சித்திரை புதுவருட கொண்டாட்டங்களினால் ஏற்பட்ட விபத்துக்களினால் நேற்றைய தினத்தில் மட்டும் 250 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மது போதை தொடர்பாக விபத்துச் சம்பவங்களில் 9 பேர் காயமடைந்துள்ள அதேவேளை 45 வீதி விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

இது தவிர இந்தக் கால பகுதியில் வீடுகளில் 40 விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் சிலர்மது போதை மற்றும் தனிப்பட்ட மோதல்களால் 18 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் பண்டிகைக்கால விபத்துக்களால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 சதவீதத்தால் அதிகரித்திருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அல்விட்டிகலை மாவத்தையில் உள்ள தொடர் மாடி ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கி பிரயோக சம்பவத்தில் 46 வயதான ஒருவர் மரணமானார்.

இவர் நேற்று முன்தினம் இரவு தற்கொலை செய்து கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே எம்பிலிப்பிட்டிய - பனாமுர பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இருவர் பலியாகினர்.

புதுவருடத்தை கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வில் ஏற்பட்ட மோதலையடுத்தே இவர்கள் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாய்தர்க்கத்தில் ஈடுபட்ட இவர்கள் கைகலப்பில் ஈடுபட்ட நிலையில் கூரிய ஆயுதத்தால் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி மரணமானார். இச் சம்பவத்தின் போது தாக்குதலை தடுக்க முனைந்த பிறிதொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்குள்ளானார்.

படுகாயமடைந்த அவர் எம்பிலிப்பிட்டிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமானதாக மருத்துவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (செ-11)

யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூசனி அம்மனின் கொடியேற்றம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெற்று 25ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது. (செ-11)

இதய அஞ்சலி

2013.04.13 அன்று மறைந்த எமது முன்னாள் ஆசிரியர்

**V.M. இராஜேந்திரன் (ஓய்வு நிலை)**

அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யா/விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம். (2372) ஆசிரியர் நலன்புரிக் கழகம், கல்லூரி சமூகம்.

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை....




| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1400/- |
| கனடா | 2500/- |
| **விசேட கட்டணங்கள்** | **(5Kg) இற்கு** |
| சுவிஸ் | 7800/- |
| அவுஸ்திரேலியா | 5500/- |
| ஜேர்மனி | 5500/- |

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-

(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: கருவாடு மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: **Rain Bow Travels**

இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9596, 0778710732

# இன, மத பேதங்களை விடுத்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

(கொழும்பு)

இன, மத, அரசியல் குலபேதங்களைமறந்து நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும். பிறந்திருக்கும் புத்தாண்டில் அனைவருக்கும் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் சௌபாக்கியம் உதயமாகட்டும் என பிரதமர் தி.மு.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டி ருக்கும் செய்தியிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம், மகிழ்ச்சி மற்றும் சௌபாக்கியத்தினை நாட்டில் ஏற்படுத்தும் வகையில் உதயமாகியுள்ள இலங்கையின் மாபெரும் கலாசாரப்பண்டிகையான சிங்கள, தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சூரிய பகவன் மீன ராசியிலிருந்த மேஷ ராசியினை வந்தடைவதுடன் உதயமாகும் புத்தாண்டினை இலங்கையர்களின் வாழ்வில் புதிய தொரு பக்கத்தினை ஆரம்பித்து வைக்கும் ஒரு விசேட சந்தர்ப்பமாகக் குறிப்பிடலாம்.

புதிய அறுவடையின் பின்னர் இந்நாட்டு மக்கள் சுபவேளையில்கலாசார ரீதியான பாரம்பரிய பழக்க வழக்கங்களின் அடிப்படையில் தமது அன்றாட கருமங்களை ஆரம்பித்து வைப்பதானது எமது ஒற்றுமையினை எடுத்துக்காட்டுகின்றன.

பாக்கியமிக்க இனங்கள் என்ற வகையில் சிங்கள தமிழ் இனத்தவர்கள் உதயமாகும் புதுவருடத்தினை ஒரு களியாட்டமாகக் கருதாது அர்த்தமிக்க ஒரு கலாசாரப் பண்டிகையாக அமைத்துக் கொள்வதற்கு உறுதி பூணுதல் வேண்டும்.

உள்நாட்டுக் கலாசாரம் மற்றும் எமக்குரிய சம்பிரதாயங்களின் ஊடாக ஒற்றுமையுடன் இந்தத் தேசத்தினைக் கட்டியெழுப்பும் பொறுப்பும் எம் அனைவருக்கும் உண்டு.

அது ஒரு கூட்டு முயற்சியாக இருக்க வேண்டியதுடன் அதற்கான இன, மத அரசியல், குல பேதங்களை மறந்து சகல இனத்தவர்களும் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியமாகும் என அவர் தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# இந்த வருடம் கறுப்பு யூலை முஸ்லிம்களுக்கு எதிராக அமையும்

## பௌத்த பிக்கு அச்சம்

(கொழும்பு)

கறுப்பு யூலை இந்த வருடத்திலும் உருவாக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டதாக பௌத்த பிக்கு ஒருவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கல்கந்த தம்மாநந்த தேரர் இந்த அச்சத்தை வெளியிட்டுள்ளார்.

வருடம்தோறும்கறுப்புயூலையை இலங்கை சந்தித்து வருகிறது. இந்த நிலையில் இந்த வருடம் அது முஸ்லிம்களுக்கு எதிரான கறுப்பு யூலையாக இருக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக கல்கந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் இனங்களுக்கிடையில் நல்லுறவை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தோல்வி கண்டுள்ளது.

இதனால் இலங்கையில் இன்று சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது எதிர்காலத்தில் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் என்று கல்கந்த தேரர் எச்சரித்துள்ளார். (செ-11)

# தமிழக மீனவர் ஒன்பது பேர் இலங்.கடற்படையினரால் கைது

(சென்னை)

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து மீன்பிடி தொழிலுக்காகச் சென்ற 9 மீனவர்கள் மத்திய கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டதாக பி.ரி.ஐ. இணையம்செய்திவெளியிட்டுள்ளது.

அவர்கள் இரண்டு படகுகளில் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த மீனவர்கள் எந்தக்கடல்பகுதியில்இருந்த போது கைது செய்யப்பட்டார்கள் என்பது தொடர்பாக உறுதியாக கூறமுடியாது என்று தமிழக அதிகாரிகளும் உள்ளூர்மீனவர் சங்கத் தலைவர் இராமகிருஷ்ணனும் கூறியதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்ட தகவல் அறிந்ததும் ஜகதாப்பட்டிணம் பகுதியில் தீவிர நிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மீனவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது குறித்து தகவல் அறிய கிடைக்கவில்லை என்று பி.ரி.ஐ. குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுல சூரியவிடம் வினவிய போது நேற்று மீனவர்கள் எவரும் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் செய்தியை மறுத்துள்ளார்.

ஏற்கெனவே இலங்கை கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டில் இந்த மாத ஆரம்பத்தில் இரு தடவைகளில் 56 பேர் வரை கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

அச்சுக் கூடத்திற்கான வெற்றிடங்கள்

**I கணினி இயக்குநர்.**

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்திற்கு 01 கலர், 04 கலர் வேலை, புத்தகங்கள், பிரசுரங்கள், திருமண அழைப்பிதழ் போன்றவற்றை திறமையாக செய்யக்கூடிய Digital, offset அச்சக வேலைகளில் **முன் அனுபவம் உள்ள** விண்ணப்பதாரிகள்.

**II அலுவலக உதவியாளர்.**

அச்சகத்தில் அலுவலகம் சார்ந்த துப்புரவு மேற்கொள்வதற்கும் வெளி வேலைகள் செய்யக்கூடிய விண்ணப்பதாரிகள்.

**III பிரசார உத்தியோகத்தர் Canvasing officer**

அச்சக வேலைகள் சம்மந்தமான, வேலைகளை வாடிக்கையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய, சிநேகித பூர்வ தொடர்பு கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள்.

*மேற்கூறப்பட்ட வெற்றிடங்களுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.*

**T.P. 077 8418172**

(C-2975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிறுவர் உளவியல்

குழந்தைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெற்றோருக்கு இது தொடர்பான விடயம் சரியாகத் தெரிவதில்லை. பெற்றோர் சரியாக இல்லையென்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்து விடும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

குழந்தைகளிடம் அன்பை வெளிக்காட்டுங்கள். வேண்டாம் என்று கூறவில்லை... அந்த அன்பு மென்மையாக இருக்கட்டும் முரட்டுத்தனமானதாக இருக்க வேண்டாம். ''என் கண்ணே!'' என்று சொல்லிக் கொண்டு பல்லை நறுமிக் கொண்டு சில பெற்றோர் குழந்தைகளிடம் போவார்கள்- அவ்வளவுதான் அழுத்தமான அன்பு.

முரட்டுத்தனமான அன்பை குழந்தைகளிடம் திணிக்கும் போது அதனுடைய உடல் கெட்டுப் போகிறது. மனதில் ஒருவகை பதற்றம் தோன்றும். உடல்நிலை சந்தோஷம் அற்று இருக்கும்.

ஒரு பன்னிரெண்டு வயது சிறுமி, அடிக்கடி மயக்கம், வாந்தி, இவ்வாறு பல நோய்கள்; பல வைத்தியரையும் நாடியும் நோய் தீருவதாக இல்லை. எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இதற்குக் காரணம் என்ன என்பதை நீண்ட நாட்களுக்கு பின்புதான் கண்டுபிடித்தார்கள்.

அந்தச் சிறுமியின் பெற்றோர் அடிக்கடி சண்டை பிடிப்பார்கள். அதை அவதானிக்கும் போதெல்லாம் இந்தக் குழந்தைக்கு வாந்தி வந்து விடும்; மயக்கம் வந்து விடும். ஏதோவெல்லாம் பேச ஆரம்பித்து விடும். இரண்டு, மூன்று நாட்களுக்கு சிறுமியின் கதை மாறாது. பின்னர் படிப்படியாக சரியாகப் போய்விடும்.

பெற்றோர் சண்டை பிடிக்கும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத உணர்வு, பயம் இவை அனைத்தும் மனதிலே தங்கி விடும். பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு குறையும்; அன்பு இல்லாது போய்விடும். வெறுப்புணர்வு ஏற்படும். மனநோய், உடல் நோய் இவை இர்ண்டும் வந்து விடும்.

இன்னொரு குழந்தை சிறுவயதிலே ஆரோக்கியமாகத் தான் இருந்தது. வாலிப பருவத்தை அடையும்போது ஆஸ்துமா நோய் அவனை பிடித்துக் கொண்டது.

ஆனால், அவர்களது குடும்பத்தில் இந்நோய் யாருக்கும் கிடையாது.

இதற்கு என்ன காரணம் என்பதை பின்புதான் கண்டு பிடித்தார்கள்.

அவனது பெற்றோரின் வன்மையான கண்டிப்பு. அவனை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும் என்று நினைத்து அதிகாரத்தை அவன் மேலே திணித்துள்ளார்கள்.

"மூடு வாயை... சத்தம் வெளியே வரக்கூடாது..." அப்படி உரத்த தொனியில் பயமுறுத்தி, அவனது அழுகையை சிறுவயதினில் இருந்து அடக்கி விட்டார்கள். அதன்பின்னர் கூட அவன் அழ வேண்டிய விடயம் ஏதும் ஏற்பட்டால் முடியாது திண்டாடுவான். மனதினுள் வேதனை முட்டிய போதும் அழ முடியாது கஷ்டப்படுவான். கண்ணிலே கண்ணீர் வெளிவராது. கடைசியிலே அது ஆஸ்துமா நோயாக உருவெடுத்தது.

ஒரு குழந்தை அழுதா... ''இதுக்கெல்லாம் போய் அழுவார்களா... இது சிறிய விடயம்'' என்று பக்குவமாக எடுத்துக் கூற வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் தாயன்பு.

பிள்ளையைப் பெற்றெடுத்தால் மட்டும் போதாது. அக்குழந்தையை ஆரம்பத்தில் இருந்தே அன்பாக வளர்த்தெடுக்க பெற்றோர் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பெண் தாய்மை அடைவது என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட வரம். அதிலும் அறிவுள்ள பிள்ளையாக வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# 224 அம்புலன்ஸ் வண்டிகள் ஜப்பானிலிருந்து இறக்குமதி

## சுகாதார அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

நவீன வசதிகளுடன் கூடிய அம்புலன்ஸ்வண்டிகளைஜப்பான்ரெயாரா நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடு பூராகவுமுள்ள அரச மருத்துவமனைகளில்நிலவும்அம்புலன்ஸ் வண்டிகளுக்கான தட்டுப்பாடுகளை நீக்கும் பொருட்டு நவீன வசதிகள் கொண்ட 224 வண்டிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இவற்றுக்கான மொத்த இறக்குமதி செலவு 21 ஆயிரத்து 125 மில்லியன் ரூபாவாகும்.

ஜெய்க்கா நிறுவன அனுசரணையுடன் இறக்குமதி செய்யப்படவுள்ள இந்த வண்டிகளில் முதற்கட்டமாக ஆயிரத்து50 மில்லியன் ரூபா செலவில் 124 வண்டிகள் அடுத்த இரண்டு மாதங்களில் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நவீன வசதிகள் கொண்ட நான்கு அம்புலன்ஸ் வண்டி கள் சுகாதார அமைச்சினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. 31.2 மில்லியன் பெறுமதியான இக்காவு வண்டிகள் நவீன வசதிகள் கொண்டவை என்பதோடு மிகவும் நவீனமானவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் 12 நோயாளர் காவு வண் டிகள் உள் ளதோடு மேலும் இரண்டு வண்டிகள் தேவையென்று யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ். சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திற்கு இவை தவிர மேலும் ஆறு நோயாளர் காவு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# குடிவரவு விதிகளை மீறுவோரின் கடவுச்சீட்டுக்கள் பறிமுதலாகும்

## பணிப்பாளர் சூலானந்த பெரேரா

குடிவரவு சட்டத்தை மீறுகின்ற நிலையில் கைது செய்யப்படுகின்ற வெளிநாட்டவர்களை குறிப்பிட்ட காலம் வரை தடுத்து வைக்கப் போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடிபெயர்வு கட்டுப்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் சூலானந்த பெரேரா ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அதனை குறிப்பிட்டுள்ளார்.இதில் கூறியிருப்பதாவது, இவ்வாறு கைது செய்யப்படுகின்றவர்கள் மிரிஹானையில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

எனினும் அங்கு தற்போது நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.அத்தடுப்பு முகாமில் 70 பேர் மாத்திரமே அங்கு தடுத்து வைக்க முடியும். ஆனால் தற்போது 100 பேர் வரை அங்கிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலத்தில் குடிவரவு சட்டங்களை மீறுகின்ற வெளிநாட்டவர்களின் கடவுச் சீட்டுக்களை தாம் பறிமுதல் செய்து கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மண்டபத்திறப்புவிழா

குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத் திறப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.வித்தியாலய அதிபர் ந.குணரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் க.சந்திரராசா, வலி.தெற்கு பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன், கௌரவவிருந்தினராக வலிகாமம் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-140 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 |
| கரட் | 180 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 60 |
| லீக்ஸ் | 200 | 110 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 |
| போஞ்சி | 100 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 |

# இராசி பலன்

15.04.2013
(சித்திரை 2, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.05 மணிவரை
மிருகசீரிடம் முழுவதும்
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை

**மேடம்** தற்துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், இனிமையான செய்திகள் இல்லம் தேடி வரலாம், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**இடபம்** பல நாட்களாக சந்திக்காமல் இரு ந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, திட்டமிட் காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சிக்கு தொலைபேசிவழி தகவல் உறுதுணை புரியும்.

**மிதுனம்** பக்குவமாக பேசி காரியம் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், வியாபாரத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும், முன்னேற் றத்துக்கு வழிகாட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், குதூகலமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**சிங்கம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள்.

**கன்னி** நண்பர்களுக்கு நிலவிய கசப்புணர்வு நீங்கும், தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றமுண்டு, செய்தொழில் விருத்தியுண்டு, தேகநலனில் ஆரோக்கியம் தென்படும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** குடும்பத்தில் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக முயற்சி எடுக்க வேண்டி வரலாம், சேமிப்புக்கள் குறையக் கூடிய வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** கௌரவமான நாள், பிறரிடம் ஒருமித்த பொறுப்புக்கள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும், தொழில் நலனுக்காக புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், தடைகள் உடையும் நாள், திடீர் பயணங்களால் பலனுண்டு, பிறர் உதவியுண்டு, உடல் நலம் சீராகும்.

**மகரம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், சொத்துக்களால் இலாபமடைவீர்கள், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தாய்வழி ஆதரவு பெருகும், கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.


**மீனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினைகள் இன்று நல்ல முடிவுக்கு வரும், வாக்கு மேன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், உறவினர் உதவி செய்வர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 6.4 சதவீதம்

## மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிப்பு




உள்நாட்டு வெளிநாட்டு சவால்களுக்கும் தடங்கல்களுக்கும் மத்தியில் 2012-ம் ஆண்டில் இலங்கை 6.4 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் 63-வது வருடாந்த அறிக்கை ஜனாதிபதியும், நிதித்திட்டமிடல் அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ்விடம் கையளித்து வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

2012-ம் ஆண்டில் எமது பொருளாதாரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. என்றாலும் 2006-ம் ஆண்டு முதல் தொடராக 7 வருடங்கள் எமது பொருளாதார வளர்ச்சி வீதம் சாதாரணமாக 6.7 வீதத்தை அடைந்து வந்திருக்கின்றது.

அதேநேரம் 2010 - 2012 வரையான காலப்பகுதியில் 7.5 வீத வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. இது யுத்தம் முடிவுற்ற பின்னர் எமது பொருளாதாரம் துரித வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

இந்த நாட்டின் பணவீக்கத்தை கடந்த 50 மாதங்களாகத் தனி இலக்கத்தில் எம்மால் பேண முடிந்துள்ளது. அதனை மேலுமொரு வருடத்திற்குப் பேணிக் கொள்ள முடியுமென்றால் அது நாட்டில் பாரிய மேம்பாட்டை ஏற்படுத்தும். நாட்டில் 30 வருடங்களின் பின்னர் முதற் தடவையாக வெளிநாட்டுக் கடன் வீதம் குறைவடைந்துள்ளது. அது உள்நாட்டு தேசிய உற்பத்தியில் 80 வீத மட்டத்திற்கு உள்ளது. அதனை 65 சதவீதத்திற்குகுறைப்பது அவசியம்.

இந்நாட்டின் வரலாற்றில் முதற் தடவையாக வேலையின்மை 4 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டு நாணய கையிருப்பு 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகின்றது. இவ்வளவு தொகையான வெளிநாட்டுக் கையிருப்பைப் பேணிக்கொண்டு கடந்த 7 வருடங்களில் 113 பில்லியன் ரூபாயை வருமானமாக அரசிற்கு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

ஆனால் இதற்கு முற்பட்ட 56 வருடங்களில் 60 பில்லியன் ரூபாயையே இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்திற்கு வருமானமாகப் பெற்றுக் கொடுத்தது.

இலங்கையரின் தனிநபர் வருமானம் 2012-ம் ஆண்டில் 2923 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. அது 2011-ம் ஆண்டில் 2836 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

எமது அர்ப்பணிப்புக்களை அதிகரிப்பது அவசியம். எமது உற்பத்தித் திறனும் செயற்றிறனும் அதிகரிக்க வேண்டும். அதனூடாக 2016-ம் ஆண்டாகும்போது 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் எனவும் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

## பொருளாதார வளர்ச்சிக்கு அந்நிய முதலீடு அவசியம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நிய முதலீடுகள் அவசியம் என்று இந்திய பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு தலைவர் ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

பொருளாதார வளர்ச்சியில் உயர் கல்வியும் முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர்களுக்கு படிப்பு மட்டும் இருந்தால் போதாது. திறமையும் இருக்க வேண்டும். ஒவ்வாரு ஆண்டும் இளைஞர்கள் பெருகி வருகின்றனர். அதனால் கல்வியின் தரத்தையும் உயர்த்த வேண்டியுள்ளது.

கடந்த ஆண்டு இந்திய பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக இருந்தது.

இது 2013/14ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாக உயரும்.


அந்நிய முதலீடுகள் அதிகளவில் வர வேண்டியது மிகவும் அவசியம். அதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையும் என்றார்.

## தங்கம் விலை சரிவு

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சைப்ரஸ் நாடு சர்வதேச சந்தையில் தங்கத்தை விற்பனை செய்து வருவதால்,உலக நாடுகளில் தங்கம் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சைப்ரஸ் நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நிலைமையை சமாளிக்க அந்நாடு,53 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடைய ,தங்கத்தை சர்வதேச சந்தையில் விற்பனை செய்ய தொடங்கி உள்ளது. இந்த தங்கத்தின் வருகையால், சர்வதேச சந்தையில் தங்கம் விலை சரிவு ஏற்பட்டுள்ளது.




## அதிகாரிக்கு ரூ.1,300 கோடி போனஸ் கொடுத்த 'கூகுள்'

தங்கள் நிறுவனத்தில் தொடர்ந்து நீடிக்க இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீல் மோகனுக்கு கூகுள் நிறுவனம் ஆயிரத்து 300 கோடி ரூபாயை போனசாகக் கொடுத்துள்ளது.

பிரபல இணையதளமான கூகுள் நிறுவனத்தில் விளம்பரப் பிரிவு அதிகாரியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீல் மோகன் பணிபுரிகிறார். கூகுள் நிறுவனத்தின் வளர்ச்சியில், இவர் பெரும் பங்கு வகித்தார்.

தற்போது கூகுள் நிறுவனத்தின் துணைத் தலைவராக பதவி வகிக்கும் நீல் மோகன் டுவிட்டர் சமூக வலை தள நிறுவனத்திற்கு செல்ல



முடிவெடுத்தார். அவரைத் தடுத்து நிறுத்த விரும்பிய கூகுள் நிறுவனம் அவருக்கு பெரும் தொகையைக் கொடுக்க முடிவு செய்து ஆயிரத்து 30 கோடி ரூபாயை போனசாகக் கொடுத்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,765.94 | 5,839.88⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,312.53 | 3,333.54⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,335.47 |

உயர்வடைந்த பங்குகள் ஹஜே(72.60), ஷெலிசின்ங்(1349.40), சிலோன் பிறிண்டேர்ஸ்(1005.40), பிறவுண்ஸ் பீச்(20.50), ரேணுகா ஷா(21.90).

சரிவடைந்த பங்குகள் பாம் காடின் ஹோட்.(81.10), ஒ[illegible](48.80), ஹைட்ரோ பவர்(6.00), மேர்ச்சன்ட் பாங்(18.30), சொப்ட்லொஜிக்.(23.80)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# இல.பொருளாதாரம் 2013/14இல் மறுமலர்ச்சியடையும்–ஆ.அ.வங்கி

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2013ஆம் ஆண்டு 5.8 வீதம் வளர்ச்சி அடையும் எனவும், 2014இல் 7.2 வீத வளர்ச்சியையும் காண்பிக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த வெளியீடான ஆசிய அபிவிருத்தி மேற்பார்வை 2013 கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிர்மாணத் துறையின் துரித வளர்ச்சியின் காரணமாகவும் சேவைகள் துறையின் வளர்ச்சி காரணமாகவும் உறுதியான நிலையில் அமைந்திருந்தது.

சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் இறுக்கமான நாணயக் கொள்கைகள் காரணமாக மெதுவாகவே இடம்பெற்றிருந்தது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆடைத் தொழிற்துறை வீழ்ச்சியை எதிர்கொண்டிருந்தது.

இறுக்கமான நாணயக் கொள்கைகள் மற்றும் உயர் வரிகள் போன்றன வெளிநாட்டு இறக்குமதியிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை சீர்செய்ய இலங்கையின் பொருளாதார கொள்கை வகுப்பாளர்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சிறந்த வரி அறவீட்டு முறைகளை பின்பற்ற வேண்டிய நிலை காணப்படுவதுடன் வரி திரட்டும் அமைப்பை விஸ்தரிப்பு செய்வதற்கான நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எண்டிபியின் புதிய சிஈஓவாக தியாகராஜா அறிவிப்பு



ரசெல் டி மெல் | தியாகராஜா

ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரி (சிஈஓ)யாகவும் பணியாற்றிவரும் ராஜேந்திரா தியாகராஜா எதிர்வரும் ஜுன் 20ஆம் திகதியுடன் ஹற்றன் நஷனல் வங்கியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளதை தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் முதல் எண்டிபி(NDB) வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பொறுப்பேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எண்டிபி வங்கியின் தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரசெல் டி மெல் பணியாற்றி வருகிறார். இவர் வங்கித் துறையில் சிரேஷ்ட அனுபவம் வாய்ந்த அதிகாரியாக திகழ்வதுடன், எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சுமார் 33 வருட காலம் வங்கித் துறையில் இவர் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ராஜேந்திரா தியாகராஜா ஹற்றன் நஷனல் வங்கியின் பணிப்பாளர் சபையிலிருந்து ராஜினாமா செய்யவுள்ளதையடுத்து இந்த பதவிகளுக்கு தற்போது வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றும் ஜொனதன் அலஸ் பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்கான அனுமதியை மத்திய வங்கி வழங்கும் பட்சத்தில், எதிர் வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் இவர் தமது பதவியை பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறந்த ஆண்டறிக்கை விருது ஜனசக்திக்கு

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற தெற்காசிய கணக்காளர் கூட்டமைப்பு விருது வழங்கும் நிகழ்வில் (SAFA) சிறந்த ஆண்டறிக்கை விருதினை ஜனசக்தி நிறுவனம் வென்றது.

2011ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் நம்பகமான நிதித் தகவல்கள் மற்றும் உயர்தர வழங்கல் போன்றவற்றை அடையாளப் படுத்தும் நோக்கில் இவ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

உண்மையாக பிராந்தியத்திலேயே மிகச் சிறந்த இடத்தில் உள்ளமை பெருமைக்குரிய விடயமாகும் என ஜனசக்தி காப்புறுதியின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.00 | 127.04 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 190.49 | 196.06 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.82 | 167.24 |
| சுவிஸ் பிராங் | 132.45 | 137.56 |
| கனேடிய டொலர் | 122.00 | 126.46 |
| அவுஸ்திரேலிய டொலர் | 129.84 | 134.84 |
| சிங்கப்பூர் டொலர் | 99.61 | 103.09 |
| ஜப்பான் யென் | 1.23 | 1.28 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.30 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.12 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் செயலமர்வு என்பன முறையே நாளை செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 5 மணி வரை மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தர மாணவர்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையில் இருந்து ஐந்து மாணவர்களை தவறாது இச் செயலமர்வில் கலந்து கொள்ள வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# தாக்கியோர் மீது நடவடிக்கை எடுக்குக

தமிழீழ விடுதலைக்காக போராடிய திருச்சி மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இராமநாதபுரத்தில் மாணவர் கூட்டமைப்பின் சார்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் உண்ணா விரதப்போராட்டம் நடைபெற்றுள்ளது.

இலங்கைமீது பொருளாதாரத் தடைவிதிக்கவேண்டும், பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது, திருச்சியில் மாணவர்கள்மீது தாக்குதல் நடத்திய காங்கிரஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியும் இலங்கைமீது அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தில் மாணவர்கூட்டமைப்பு வலியுறுத்திய திருத்தங்களை செய்யாத இந்திய அரசை கண்டித்துமே மேற்படி இராமநாதபுரம் ஊராட்சி அலுவலகம் முன்பாக மாணவர்கள் உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த உண்ணாவிரதப்போராட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த ஏராளமான மாணவர்கள் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)


# இலங்கையர் கைது

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் மிர்சாகாஞ் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது அவரிடம் உரிய ஆவணங்கள் எவையும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# இந்திய தூதுக்குழுவினர் அமைச்சர் பசிலுடன் சந்திப்பு



இலங்கை வந்துள்ள இந்தியாவின் ஆறு பேர் அடங்கிய பாராளுமன்றக்குழு 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்தியாவின் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த லோக்சபா மற்றும் ராஜாசபா உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரே குறுகிய கால விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார அபிவிருத்தி மற்றும் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (அ)

# 36 மாடிகளைக் கொண்ட கசினோ சூதாட்ட மையம்

கொழும்பில் 36 மாடிகளைக் கொண்ட கசினோ சூதாட்ட மையமொன்று அமைக்கப்படவுள்ளது.

கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தை கசினோ சூதாட்ட மாளிகையில் க்றவுன் கலம்போ என்ற பெயரில் இச் சூதாட்ட மாளிகை அமைக்கப்படவுள்ளது.

350 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டு இந்த கசினா சூதாட்ட மையம் அமைக்கப்பட உள்ளதாகவும் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

உலகின் முதனிலை கசினோ வர்த்தகரான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் பார்க்கர் இதற்கான முதலீடுகளை செய்ய உள்ளார். (அ)

# மானிய உரத்தின் விலை கிலோவுக்கு 3 ரூபாவால் உயர்வு

அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்படும் பசளை வகைகளுக்கான விலை கடந்த ஆண்டு விலையில் கிலோவுக்கு 7 ரூபாவாக இருந்து இவ் ஆண்டு 10 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையங்களுக்கு சுற்று நிருபம் மூலம் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு அமைய 50 கிலோ கொண்ட ஒரு அந்தர் பசளை 350 ரூபாவில் இருந்து 500 ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறு குளங்களின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு யூரியா 64 கிலோவும் அடிக்கப்பட்டு பசளை 16 கிலோவும் பொஸ்பரஸ் பசளை 16 கிலோவும் வழங்கப்படவுள்ளது. பெரிய குளங்களின் கீழ் நெற் செய்கையில் ஈடுபடுவோருக்கு ஒரு ஏக்கருக்கு யூரியா 74 கிலோவும் அடிக்கப்பட்டு பசளை 20 கிலோவும் பொஸ்பரஸ் பசளை 20 கிலோவும் விநியோகம் செய்யும் படி அச்சுற்று நிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-3-15)

# பிரதான வாய்க்காலை சீர்செய்ய கோரிக்கை

(சிவநகர்)

கடந்த வருடம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமரவீர உருத்திரபுரம் பகுதிக்கு வந்த போது உருத்திரபுரத்தோடு இணைந்துள்ள கிராமங்களின் தெற்கு பகுதியில் உள்ள பிரதான வாய்க்கால் சீர் செய்து தருவதாக உறுதியளிக்கப்பட்ட போதும் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை

ஆயினும் இவ்வாண்டு ஒதுக்கப்படும் நிதியில் இவ் வேலைத்திட்டத்தை முதன்மைப்படுத்தி செய்வதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாரிய வேலைத்திட்டமான இவ் வேலைத் திட்டத்திற்கு தற்போது 20 இலட்சம் ரூபா மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

எனவே, இதற்கான வேலைத்திட்டத்தை கழிவு வாய்க்கால் சென்றடையும் சிவநகர் பகுதி முன்பக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதே வாய்க்கால் நீர் வழிவதற்கு உதவக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் இந்நிதியை கொண்டு பல கிராம மக்களும் பயன்படுத்தும் மயானத்திற்கு செல்லும் பாலத்தினையும் பிரதானமாக கவனத்தில் எடுக்க வேண்டுமென்று அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (அ-3-254)

# மாத்தளை மனித எச்சங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அமைச்சர் விமல் கோரிக்கை

(கொழும்பு)

மாத்தளை வைத்தியசாலை பிரதேசத்தில் தோண்டியெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொல்லப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களுடையது என ஜே.வி. பியின் முன்னாள் உறுப்பினரும் தற்போது இலங்கையின் வீடமைப்புத்துறை அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவர்கள் அப்போதிருந்த அரசாங்கத்தின் அரசியல் நோக்கங்களுக்காக கொல்லப்பட்டவர்கள் என்றும் மாத்தளை வைத்தியசாலை பிரதேசத்தில் இருந்து இதுவரை 154 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த மனித எச்சங்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் எவையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. எனினும் இவ்வாறான கொலைகள் அரசாங்களின் வேறுபட்ட அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

இவர்களுக்கு மணமகள் தேவை
கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: B -1622 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'<br>கி.பா: 52, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1625 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 30.75<br>தகைமை/தொழில்: HNDA நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: B -1623 | பிறப்பு: 1987 இந்து சிவகோத்திரம்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 33.5, சூரி; செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: MBBS Dr<br>தொ.இ: G-1629 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 14, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L, இ.போ.ச காப்பாளர்<br>தொ.இ: B -1624 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'1"<br>கி.பா: 47, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: HNDA<br>தொ.இ: G -1632 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 4, 8 இல் செவ்.<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Company Manager<br>தொ.இ: B -1626 | பிறப்பு: 1980 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா: 33.25<br>தகைமை/ தொழில்: BBA ஆசிரியர்<br>தொ.இ: G -1623 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெற்பலி பகுதியில் 65 ஏக்கர் காணியில் படைமுகாம்

(யாழ்ப்பாணம்)

கச்சாய் கெற்பலி பகுதியில் 65 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந் நிலஅபகரிப்பு இந் நிலத்தில் இராணுவத்தின் பாரிய முகாம் அமைப்பதற்கே என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நில அபகரிப்பு தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கச்சாய் கெற்பலி என்னுமிடத்தில் ஏறத்தாழ 65 ஏக்கர் நிலப்பரப்பினை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. அங்கு பாரிய இராணுவ முகாம் ஒன்றினையும் இராணுவம் அமைத்து வருகின்றது.

ஏ9 வீதியிலிருந்து உட்புறமாக கெற்பலி என்ற கிராமத்தில் இந்த 65 ஏக்கர் அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இக்காணி ஏற்கனவே தனி நபருக்கு சொந்தமானதாகும். சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இது அரசுடைமையாக்கப்பட்டது.

இதனை தற்போது இராணுவம் அபகரித்து பாரிய படை முகாம்களினை அமைத்து வருகின்றது என்றார் அவர். (அ-4)




நன்றி: ஐலண்ட்

# வடக்கில் காணிகளை சுவீகரித்து படையினரை குவிக்க அரசு திட்டம்

## சுரேஸ் எம்.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்திலுள்ள காணிகளை படையினருக்கு பறிமுதல் செய்து கொடுப்பதற்கென ஒவ்வொரு மாவட்டங்களிலும் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**



அரசின் இச் செயற்பாட்டினால் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்கள் யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்களுக்கிடையில் மீண்டும் தமது காணிகளினை விட்டு விரட்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் காணி சுவீகரிப்பிற்காக அதற்கென தனி உத்தியோகத்தர் ஒருவரினை சட்ட முறைகளிற்கு அமையாமல் மாவட்ட ரீதியாக நியமித்துள்ளது.

உதாரணமாக வவுனியா மாவட்டத்திலும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காணி எடுத்தல் சட்டத்தில் அத்தியாயம் 460ஆம் இலக்க பிரிவின் கீழான அறிவித்தல் என எவ்விதமான கடித தலைப்புக்களும் இல்லாமல் அறிவித்தல் ஒன்றினை மக்களுக்கு விடுத்துள்ளார்.

இதில் கீழ் குறிப்பிட்ட காணி பொதுத் தேவையின் அடிப்படையில் சுவீகரிக்கப்படவுள்ளது.

வட மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலர் பிரிவின் நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவிற்குரிய பேராடை கூழாங் கிராமத்தில் அமைந்துள்ளதும் எனக் குறிப்பிட்டு அதனை வரைபடத்தில் காட்டி கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளான 20 ஏக்கர் நிலப்பரப்பு வடக்கில் கொக்குவழி நோக்கிய வயல் நிலங்கள், கிழக்கு பேயாளி குளம் அணைக்கட்டு, தெற்கு இராமச்சந்திரன் வயல் நிலம், மேற்கு ஏ9 பிரதான வீதி ஆகிய எல்லைகளினை கொண்ட நிலத்தில் 56 ஆவது படைப்பிரிவின் இராணுவ தலைமைகயத்தை நிறுவுதல் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

இக்காணிக்கு உரித்துடையவர்களின் சம்மதம் பெறப்படாமல், நட்டஈடு கொடுக்கப்படாமல், அறிவித்தல் எதுவும் வழங்கப்படாமல், மிக மோசடித்தனமான முறையில் எவ்வித சட்டங்களுமின்றி அபகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினை பலப்படுத்த என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் செய்து வருகின்றது.

இங்குள்ள யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி இங்கு 14 ஆயிரம் இராணுவம் தான் உள்ளது என்று சொல்கின்ற அதேநேரம் வடக்கு மாகாணத்தில் இராணுவத்தை நிலை நிறுத்துவதற்காக யாழ்ப்பாணம், கொடிகாமம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களிலும் இங்குள்ள ஒன்றரை இலட்சம் இராணுவத்தினரை நிலை நிறுத்துவதற்காக மக்களின் தனிப்பட்ட காணிகளை பறிமுதல் செய்கின்றது.

இக்காணிகளில் குடியிருக்கும் மக்களிற்கு எவ்வித மாற்று ஏற்பாடுகளுமின்றி அவர்களை நடுத் தெருவில் விட்டுவிட்டு காணிகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

ஆகவே அரசு இவ்வாறான நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவதனால் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு 4 வருடங்கள் முடிவடைந்த நிலையில் மக்கள் மீண்டும் தமது காணிகளை விட்டு விரட்டப்படும் நிலையில் உள்ளனர் என அவர் தெரிவித்ததோடு,

இந்த நிலையினை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-4-6)




## கும்பாபிஷேகம்

யாழ்.வண்ணை பிறவுண் வீதியிலுள்ள ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.55 முதல் விநாயகர் வழிபாடும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதலும் இடம்பெறவுள்ளது.

மே முதலாம் திகதி புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் பூசைகள் ஆரம்பமாகி முற்பகல் 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் கும்பாபிஷேகமும் ஏனைய பூசைகளும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## தேர்த்திருவிழாவில் தங்கச் சங்கிலி அபேஸ்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தை ஒருவரின் தங்கச் சங்கிலி அபகரித்து செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றையதினம் தேர்த் திருவிழாவின்போது இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்த பெண்மணியின் கழுத்தை குறிவைத்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சாதுரியமாக பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு அறுத்துச் செல்லும்போது குறித்த பெண்மணியின் கழுத்தில் சிறு காயங்களும் ஏற்பட்டுள்ளன.

சனநெருக்கடி உள்ள ஆலயங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை தெரிந்ததே.

எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-3-29)

## முழுநிலா கருத்தரங்கு

(சாவகச்சேரி)

இவ்வாண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலைத்துறை மாணவர்களுக்கான முழுநிலாக் கருத்தரங்கு-04 எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் வரலாற்றுப் பாடத்தில் இலங்கை ஐரோப்பிய பாடங்கள் குறித்தல் தொடர்பான அலகை வரலாற்று வளவாளர் எஸ்.துஜிகரன் நடத்தவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## மஹோற்சவம்

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாவின்போது 20 ஆம் திகதி சனிக்கிழமை பக்தி முத்தி பவன உற்சவமும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 24 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தமும் கொடியிறக்கமும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகமும் மறுநாள் 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

## விளையாட்டு விழா

(பண்டத்தரிப்பு)

வலி.மேற்கு பிரதேச செயலக விளையாட்டு பேரவையின் இறுதி நாள் விளையாட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-30)

## சமுர்த்தி பணக் கொடுப்பனவு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான கடந்த ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான மாத பணக் கொடுப்பனவு காரைநகர் சமுர்த்தி வங்கி ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.


இன்று திங்கட்கிழமை விடுமுறை தினமாக இருந்தபோதும் விசேடமாக சமுர்த்தி வங்கி திறக்கப்பட்டு வாடிக்கையாளர் கொடுப்பனவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பனவை பெற தகுதியானவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-3-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய

# சிங்கப்பூர் கிருஷ்ணன் மண்டப திறப்பு விழா-15.04.2013



## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



சைவப் பாரம்பரிய, பண்பாடு, கலாசாரங்களை பேணி நடக்கும் இக் குப்பிழான் கிராமம் ஓர் சிவபூமியாகும். இக் கிராமத்தின் தனிப்பெரும் சைவப் பாடசாலை குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம். அதன் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பிரதான மண்டபமும் பொலிவுடன் அமைந்துள்ளது. இதனை செயற்படுத்திய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

இம்மகா வித்தியாலயம் கல்லூரி எனும் உயர் நிலையை அடைய வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

## எங்கள் கிராமத்தின் அறிவாலயம்




ஆன்மீக ஞானிகள், இசை மேதைகள், நாடகாசிரியர்கள், சித்தபுருசர்கள், உழைப்பாளிகள், சமூக நலத்தொண்டர்கள் எனப் பலரை உருவாக்கிய எங்கள் மண்ணின் அறிவாலயமாக குப்பிழான் விக் கினேஸ்வரா மகா வித்தியாலயம் திகழ்கிறது. 1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை 85 வருடங்களாக எங்கள் மண்ணின் மைந்தர்கள் பலரின் அறிவுக்கண்ணைத் திறந்து விட்ட ஞான ஆலயமாக மிளிர்கிறது. 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசுப் பரீட்சையில் இங்கு கல்வி கற்ற மாண வன் ஒருவர் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே இங்கே கல்வி பயின்ற கந்தையா கிருஷ்ணன் என்பவர் 95 வயதைத் தாண்டிச் சிங்கப்பூரிலே இன்று வாழ்ந்து வருகின்றார். தள்ளாத வயதில் பெருமுயற்சி எடுத்த இவர் புலம்பெயர் நாடுகளில் வாழும் நம்மவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துச் செயற்பட்டார். இவருடைய சிந்தனை இன்று செயல்வடிவம் பெற்றுள்ளது. முற்றாகஅழிந்த பிரதான மண்டபம் அறுபது இலட்சம் ரூபாவிற்கு மேல் செலவழிக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. புதிய மண்டபத்தின் திறப்புவிழா இன்று மிகவும் விமரிசையாக நடைபெறுகிறது. எங்கள் பிள்ளைகளின் அறிவுக்கண்ணைத் திறக்கும் அறிவாலயமாக எங்கள் பாடசாலை என்றும் மிளிரவேண்டுமென்று எனது குலதெய்வமாகிய கற்பக விநாயகப்பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
**தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சபை**

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச்செய்தி



சைவநெறியின் மேன்மையுணர்ந்து நெறிமுறை பேணும் பாரம்பரிய திருவூர் குப்பிழான். இத்திருவூர் மக்களின் பள்ளித் தலமாக விளங்கும் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான மண்டபத் திறப்புவிழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். பலநூறு அறிஞர்களின் ஆரம்ப அத்திபாரமாக இப்பாடசாலை விளங்குவதை யான் அறிவேன். இவ்வூர் மக்கள் தங்கள் குல தெய்வத்தை நேசிப்பது போல் பாடசாலையையும் நேசிப்பது பாராட்டுக்குரிய, முன்மாதிரியான பணியாகும்.

இன்று உலகின் பல பாகங்களிலும் வாழும் குப்பிழான் மக்களின் உன்னத பங்களிப்பால் அழகான மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். அறிவுப்பணிக்கு அர்ப்பணிப்புடன் உதவிய அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து இறையருளால் இப்பாடசாலை விரைவில் உயர் கல்லூரியாக மிளிரப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை,**
**தலைவர்- சிவபூமி அறக்கட்டளை**

## எல்லாவளமும் பெற்று வளர வாழ்த்துகின்றேன்



சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தில் பெருமலையாக நிமிர்ந்து நிற்கும் குப்பிழான் பதியில் கல்விக்களஞ்சியமாக விளங்குவது விக்கினேஸ்வரா மகா வித்தியாலயமாகும். யுத்தகால அனர்த்தத்தால் முற்றாக அழிக்கப்பட்ட பிரதான கலாசார மண்டபம் புலம்பெயர் பழைய மாணவர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகின்றது. மேலும் பல வளங்களோடு பாடசாலை நிமிர்ந்து நிற்க வாழ்த்துகிறேன்.

**நா.கணேசலிங்கம்**
**தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**குப்பிழான் தெற்கு, குப்பிழான்.**

## பொருளாளரின் சிந்தனையிலிருந்து...



எமது அறிவாலயமாக விளங்கும் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு புதுப்பொலிவுடன் இப்பிரதான மண்டபம் அமையப்பெற்றது இறைவன் திருவருட்கடாட்சமாகும். எமது நீண்டநாள் கனவு இன்று நிறைவேறியுள்ளதையிட்டு உலகின் பல பாகத்திலும் உள்ள குப்பிழான் மக்கள் உளம் பூரிப்படைவதைக் காண்கின்றோம்.

உலகிலுள்ள நம் உறவுகளுக்கு உணர்வூட்டி இவ் அழகிய மண்டபத்தினை நமக்களித்தவர் இப்பாடசாலையின் மூத்த பழைய மாணவனும் சிங்கப்பூர்வாசியுமான திருவாளர் கந்தையா கிருஷ்ணன் (ஓய்வுநிலை தபாலதிபர், வயது 96) ஆவார். இதன் நிமிர்த்தம் இம்மண்டபத்திற்கு சிங்கப்பூர் கிருஷ்ணன் மண்டபம் என பெயர் சூட்டி அகமகிழ்கின்றோம்.

எமது அறிவாலயம் தலைசிறந்த கல்விக்கூடமாக மிளிரவேண்டுமென பேசும் தெய்வமாம் கற்பக விநாயகன் கழலடி இறைஞ்சுவோம்.

**தி.ரவீந்திரநாதன், பொருளாளர் பாடசாலை அபிவிருத்திச்சபை**

## சிங்கப்பூர் க.கிருஷ்ண்னின் ஆசிச்செய்தி



எங்கள்வித்தியாலயம்பல்துறை சார் கல்விமான்களை நமக்களித்த ஓர் கல்விக்கூடமாகும். கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இதன் பிரதான மண்டபம் முற்றாகச் சிதைக்கப்பட்டது அறிந்து மனவேதனையின் காரணமாக உலகின் பல பாகத்திலுள்ள நம்மூர் உடன் பிறப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நீண்ட கால நோக்கில் பாவனைக்குரிய நவீன மண்டபத்தை அமைக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்ததுடன் பாடசாலை அபிவிருத்திச் சபையை 2010 இல் உருவாக்கினேன். எனது தொந்தரவுக்கு இத்தருணத்தில் அனைவரையும் மன்னிப்புக்கோருவதுடன் எனது குரலை செவிமடுத்த அனைத்து உறவுகளுக்கும் எனது சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். இவ் அழகிய பிரதான மண்டபத்தை பூரண பயன்பாட்டுக்குரியதாக்கி மாணவச் செல்வங்கள் கல்வியில் செழிப்புறவும் இம்மண்டபத்தின் மேல்தள வேலையை விரைவில் பூர்த்திசெய்ய வேண்டும் எனவும் எல்லாம்வல்ல இறைவனின் அருளாசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**
**குப்பிழான் கந்தையா கிருஷ்ணன்**
**சிங்கப்பூர்**

## ஆசிச் செய்தி



குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தின் பிரதான மண்டப திறப்பு விழாவிற்கு எல்லாம் வல்ல இறைவனுடையதும் குருதேவர் சின்மயானந்தருடையதும் ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இப் பாடசாலையிலே ஒரு இந்து எழுச்சியாக பாடசாலையின் பிரதான மண்டப திறப்பு விழா நடைபெறுவது சிறப்புக்குரியது. இந்துக் கலாசாரமும் பாரம்பரியமும் பேணப்படுவது இன்றைய காலத்தின் அவசிய, அவசர தேவையாக இருக்கின்றது.

அதை பூர்த்தி செய்யும் விதத்தில் சைவக் குழந்தைகள் எல்லாம் வாழ வேண்டும் என்று வேண்டி மீண்டும் இறையாசி வேண்டி நிறைவு செய்கிறோம்.

**இறைபணியில்**
**பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள்**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கிய குப்பிழான் கிராமம் கலி நீங்கி மீண்டும் தழைப்புறும் காலத்தில் கரலடி வைக்கும் நன்னாளில் கல்விக் கண் திறக்கும் சாலை சான்றோர் நெறியுடன், கூட்டுழைப்புடன் மீண்டும் புத்தொளி பெறுகின்ற ஓர் வேளையில் மகா வித்தியாலய பிரதான மண்டப திறப்பு விழா சிறப்புறவும் வித்தியாலயம் மேலும் செழிப்புற்றோங்க இறைவனின் பிரார்த்தனையுடன் எனது வாழ்த்துக்கள்.

**இ.இளங்கோவன்**
**கௌரவ செயலாளர், வடமாநில ஆளுநர் செயலகம்.**

## முக்கலைகளும் வளர வாழ்த்துக்கள்



குப்பிழான் கிராமத்தின் ஒரே கல்விச் சொத்தாகிய விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத் திறப்புவிழா இனிது நடைபெற வாழ்த்துக்கள்.

இம்மண்டபத்தின் மூலமாக மாணவர்கள், கிராமத்தவர்கள் முழுப்பயன்பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து விழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

**தி.சசீதரன், ஆசிரியர்**
**செயலாளர்- பாடசாலை அபிவிருத்திச்சபை.**


**A.R.G.**
**பேக் ஹவுஸ்,**
**குப்பிழான்.**
**உரிமையாளர்: திரு. சம்பந்தன் காந்தன்**

**என். விமலச்சந்திரன்**
**ஓட்டுத் தொழிலகம்,**
**குப்பிழான் சந்தி,**
**குப்பிழான்.**

**மலராக்கம்**
**தில்லைநாதன் ரவீந்திரநாதன்**
**(அதிபர் தரம்)**
**ஆசிரியர், வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்**




**கந்தையா கனகரட்ணம் நினைவாக**
**சுதர்சன், குப்பிழான்.**

**டிலக்ஸ் உணவகம்**
**குப்பிழான் சந்தி,**
**குப்பிழான்.**

**கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் நினைவாக**
**கமலாதேவி சுந்தரலிங்கம்**
**குப்பிழான்.**

**அமரர் செல்லப்பா ஜயாத்துரை**
**நினைவாக குடும்பத்தினர்**
**குப்பிழான்.**

**டினு ஹாட்வெயர்**
**கட்டுவன் றோட்,**
**ஏழாலை**
கட்டட எலக்ரிக் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
0777582824

**சிவம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,**
**குப்பிழான் சந்தி,**
**குப்பிழான்.**
**0771049508**

**திவானா ஸ்ரோர்ஸ்,**
**குப்பிழான் சந்தி,**
**குப்பிழான்.**

**லீடோ சலூன்**
**குப்பிழான் சந்தி,**
**குப்பிழான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை குற்றக் கூண்டுக்குள் அனுப்ப முயலும் இலங்கை அரசு

ஜெனீவா தீர்மானத்தை அடுத்து, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தொங்கு நிலை உறவு, சற்று ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது போலவே தெரிகிறது. இது, இருநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல், சற்று ஆழமாவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் புதுடெல்லி காட்ட ஆரம்பித்துள்ள இறுக்கமான போக்கு கொழும்புக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது இந்தியப் பிரதிநிதி திலீப் சின்ஹா வாசித்த அறிக்கையில், குற்றச்



சாட்டுகள் தொடர்பாக நம்பகமான - சுதந்திரமான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டிருந்தது.

கூட்டணிக் கட்சிகளின் நெருக்கடி, தமிழ்நாட்டின் அழுத்தங்களால், இலங்கைக்கு எதிராக வாக்களிக்க இந்தியா முடிவு செய்தது என்பதை விட நம்பகமான- சுதந்திரமான விசாரணைகளை வலியுறுத்தி இந்திய பிரதிநிதி வெளியிட்ட அறிக்கைதான் கொழும்பை பெரிதும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது.

அதுமட்டுமன்றி, அண்மையில் ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித், போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக நம்பகமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

மொத்தத்தில், பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் போரை நடத்தியதுதான, இலங்கை அரசாங்கத்தின் கதையை, இந்திய அரசாங்கம் நம்பத் தயாராக இல்லை.

கடந்தவாரம் சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், ராஜபக்ச அரசால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பதை காங்கிரஸ் மறுக்கவில்லை. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளும் வகையிலான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதையும் காங்கிரஸ் மறுக்கவில்லை. என்று கூறியிருந்தார்.

இது மனித உரிமைகள் விவகாரத்தல், கொழும்புடன் இணங்கிப் போகும் நிலையில் புதுடெல்லி இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, போர்க் குற்றச் சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் விடயத்தில் இலங்கை அரசின் நிலைப்பாட்டையோ அல்லது அதன் நலனையோ பாதுகாக்கின்ற பணியை புதுடெல்லி மேற்கொள்ளாது என்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது. இத்தகைய நிலையில்தான், கடந்த 9ஆம் திகதி இந்து நாளேட்டில், இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான ஹர்தீப் சிங் பூரி இலங்கை மீதான இந்தியாவின் செயற்பாடு ஏன் சரியானது என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

பூரி இலங்கை விவகாரத்தில் ஒன்றும் அந்நியமானவர் அல்ல. ஜே. என். டிக்சிற் கொழும்பில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றய காலத்தில், அவர் கொழும்பில் மூத்த அதிகாரியாக இருந்தவர். 1987இல் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக முதலில் யாழ்ப்பாணம் சென்றவர். புலிகளின் தலைவர் பிரபாகரனை சுதுமலையில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் அழைத்துச் சென்றவர், இலங்கையில் இந்தியத் தலையீடுகள் குறித்த அத்தனை விவரங்களையும் நன்றாகவே அறிந்தவர். நியூயோர்க்கில் ஐ.நா. வுக்கான தூதுவராகப் பணியாற்றி இரு



மாதங்களுக்கு முன்னர்தான் ஓய்வு பெற்றுள்ளவர். அவர் தனது கட்டுரையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் கடுமையாக விமர்சித்திருந்தார். இதற்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, இலங்கையில் தீவரவாதத்தை வளர்த்தெடுத்தது இந்தியாவே என்றும், நேரடியான தலையீடுகளின் மூலம் தீவரவாதத்தை உருவாக்கி விட்ட பொறுப்பில் இருந்து இந்தியா தப்பித்துக்கொள்ள முடியாது என்று பதிலடி கொடுத்துள்ளார். இந்தப் பதிலடிதான் அடுத்த விவகாரத்தையும் சேர்த்தே கிளப்பிவிட்டுள்ளது.

அதாவது, இந்திய தலையீடு குறித்து தொடக்கத்தில் இருந்தே முழுமையான விசாரணை நடத்துவது குறித்து அனைத்துலக சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என்று கோத்தபாய ராயபக்ச தெரிவித்துள்ள கருத்து, இந்தியாவக்கு கண்டிப்பாக எரிச்சலூட்டக் கூடியது.

ஏனென்றால், இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டது, தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தது, ஆயுதங்கள் கொடுத்தது, அடைக்கலம் கொடுத்தது என்று பல பரிமாணங்[illegible] உள்ளன. இவை யெல்லாம் [illegible] கொழும்பு. கோத்தபாய ராஜபக்சவின் கருத்து இதனையே தான் உணர்த்தி நிற்கிறது.

இது ஹர்தீப்சிங் பூரியின் கட்டுரைக்குப் பின்னர் தோன்றியுள்ள நிலை என்று கருதினால் அது தவறு. ஜெனிவாவில் இந்தியாவின் நிலைப்பாடு வெளிப்பட்ட பின்னரே கொழும்பிடம் இந்த உணர்வு வேரூன்றிவிட்டது.

அதாவது, இலங்கை விவகாரத்தில் இந்தியத் தலையீடு குறித்து சர்வதேச விசாரணையைக் கோருகின்ற அளவுக்கு, இலங்கை சென்றுள்ளது என்பது, சாதாரணமான விடயமல்ல. அதுவும், இலங்கையில் இரண்டாவது சக்திவாய்ந்த நபராக கருதப்படும், கோத்தபாய ராஜபக்ச வெளியிட்டுள்ள இந்தக் கருத்து, புதுடெல்லிக்கு நிச்சயம் வெறுப்பையே அளித்திருக்கும்.

இது தவிர, இலங்கையில் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது, மூலம், இந்தியாவையும் குற்றக் கூண்டில் நிறுத்த கொழும்பு முனைகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க இந்தியா எல்லா உதவிகளையும் வழங்கியது என்பதை புதுடெல்லி மறுத்தே வந்தாலும், அதுதான் வெளிப்படையான உண்மை. இறுதிக் கட்டப் போரில் நடந்த குற்றங்கள் குறித்து விசாரிக்க முற்படும்போது, இந்தியா மீதும் குற்றச்சாட்டுக்கள் வரும் என்பதால் தான், இலங்கை அரசை பல்வேறு தருணங்களில் இந்தியா காப்பாற்றி வந்துள்ளது. இப்போது இந்தியா, மனித உரிமை விவகாரங்களில் இலங்கையைக் காப்பாற்றத் தயாராக இல்லாத நிலையில், இந்தியாவையும் தெருவுக்கு இழுக்க இலங்கை தயாராகிவிட்டது. ஆனால் ஒன்று, இறுதிப் போரின் போது, இந்தியாவும் உதவியதே என்று இலங்கை இன்னமும் வாயைத் திறக்கவில்லை.

அதற்குப் பதிலாக, தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சி, ஆயுதங்கள், அடைக்கலம் கொடுத்து இலங்கையில் போரை உருவாக்கிவிட்டது இந்தியா தான்; அதன் தலையீடுதான் என்ற குற்றச்சாட்டை சுமத்த முனைகிறது



கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவும் கூட, இந்தியாவை சங்கடத்தில் ஆழ்த்துகின்ற- நெருக்கடிக்குள் தள்ளிவிடுகின்ற முயற்சிதான். ஏனென்றால், இலங்கையில் தாம் கைகள் கட்டப்பட்ட நிலையில் போரிட்டதாகவே இந்தியப்படையினர் எப்போதும் கூறிவந்துள்ளனர்.

ஆனால், அயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் இந்தியப்படையினரின் நடவடிக்கைகளின்போது கொல்லப் பட்டனர்; காயமடைந்தனர்; இது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. இலங்கையில் தமிழர்களைக் கொன்றுவிட்டுத் திரும்பும் அமைதிப் படையினரை வரவேற்கச் செல்ல மாட்டேன் என்று, சென்னை திரும்பிய இந்தியப்படையினருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பையே அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி புறக்கணித்திருந்தார். அப்போது மனித உரிமகளுக்கு உலகளாவிய ரீதியில் பெறுமானம் இருக்கவில்லை. மனித உரிமைகளைத் தட்டிக் கேட்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால், இந்தியப்படையினரின் மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் விசாரிக்கப்படவும் இல்லை. விசாரிக்கப்படவேண்டும் என்று அழுத்தங்கள் கொடுக்கப்படவும் இல்லை. இப்போது, இலங்கை மீது அழுத்தங்கள் அதிகரிக்கும்போது அந்த அழுத்தத்தை இந்தியாவும் சேர்ந்தே கொடுக்க முனையும்போது, தடாலடியாக, இந்தியா மீது அதைத் திருப்பிவிடப் பார்க்கிறது கொழும்பு. வெளிப்படையில் இதனை ஒரு புத்தி சாதுரியமான அரசியல் நகர்வு என்று கருதினாலும், இத்தகைய அணுகுமுறை தற்கால இராஜதந்திர அணுகுமுறைகளுடன் ஒத்துப்போகின்ற ஒன்றல்ல. இது கிட்டத்தட்ட பனிப் போர்க்கால இராஜதந்திர அணுகுமுறைகளை ஒத்தது.

அதுமட்டுமன்றி, காஸ்மீரில் இந்தியப்படையினர் செய்த மனித உரிமை மீறல்கள் குறித்து, இலங்கை அமைச்சர்கள், இந்தியாவை நோக்கி சுட்டு விரலை நீட்டவும் தொடங்கியுள்ளனர். இது நிலைமையை மேலும் மோசமாக்கும் அறிகுறிகளை வெளிப் படுத்தியுள்ளது.

இப்போது, இந்தியா கொடுக்கும்- கொடுக்க முனையும் அழுத்தங்களை குறைக்கும் வகையிலேயே, இலங்கை நகர்வுகளை மேற்கொள்கிறது. இது கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தொங்கு நிலை உறவை மேலும் ஈடாடச் செய்துள்ளது. இந்த ஈடாட்டம் என்பது, இரு நாடுகளுக்கும் இடையிலான இறுக்கமான உறவுப்பிணைப்புக்கு சவாலாகவே இருக்கும். இருநாடுகளும், குற்றச்சாட்டுகளை அடுக்க ஆரம்பித்தால், இன்னும் எத்தனையோ வெளிவராத இரகசியங்கள் கூட அம்பலத்துக்கு வரக்கூடும்.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

15



யாழ்ப்பாண இராச்சியத்துக்கு புதியதொரு மன்னன் கிடைத்துவிட்டான்; ஆரியச் சக்கரவர்த்திகள் நாடு பேணி, தமிழ் பேணி, கலை பேணி அமர்ந்திருந்தார். எழில் நந்திச் சிம்மாசனத்தில் சங்கிலி அமர்ந்து ஒரு திங்கள் ஆகிவிட்டது. நாட்டின் விழாக்கோலம் படிப்படியாகக் குறைந்து அரசு வழமைக்குத் திரும்பியது.

இன்று அவன் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிபதி. காலை மலர்ந்து வெகு நேரமாகிவிட்டது. மஞ்சத்தை விட்டெழுந்து சாளரத்தை நாடிச் சென்றான். தூரத்தில் அரண்மனை வாசலில் சேதுச் சின்னம் தாங்கிய கொடி பறந்து கொண்டிருந்தது. எல்லாம் கனவு போல எத்தனை கோடி நினைவுகள்?



செங்கை ஆழியான்

காற் சலங்கை ஒலி 'கலகல' என எழுந்தது. மெதுவாக மணிக்கதவங்களை திறந்து கொண்டு அவனது பட்ட மகஷி அரசமாதேவி வந்தாள். மன்னன் அசையாது நின்றான்.

"சுவாமி..."

அழைப்போடு மென்மலர் மொக்கொன்று அவன் தோளில் விழுந்தது. வளையல் கள் சப்தித்தன.

"என்ன அப்படிப் பலமான யோசனையாம்?"

சங்கிலி திரும்பினான். பனிச்சையாகக் கட்டிய கூந்தலில் தேன் சிந்தும் மலர்கள் குவிந்தும், விரிந்தும் இருக்க, பிறை நுதலுக்குக்கீழ் அந்த விற்புருவங்களக்குக் கீழ் இரு ஏக்க விழிகள் இமைக்க மறந்து தேங்கி நின்றன.

"அரசமாதேவி" என அழைத்தான். "நீ என்ன கேட்டாய்? உன் எழில் தரும் பிரம்மிப்பில் மறந்துபோனேன்..."

"கேலியாக இருக்கிறதா?"

"பட்டத்து மகஷியிடம் கேலியா? உண்மையாகத்தான் கேட்டேன்."

சங்கிலி மௌனமாக மாளிகை வாசலில் காற்றில் படபடத்துப் பறக்கும் நந்திக் கொடியைப் பார்த்தான்.

"அந்த சேதுக்கொடியில் என்ன இருக்கிறது?"

"எவ்வளவோ இருக்கிறது மாதேவி... எங்கள் சின்னம் நந்தி அதாவது சேது. எங்கள் கொடி நந்திக் கொடி. பட்டயமும் சேது சின்னமும் கொண்டது. குலச்சின்னம் சேது. எங்கள் நாணயங்களில் சேது என்றே பொறிப்போம். வார்க்கின்ற பொற்காசுகளிலும் செப்புக் காசுகளிலும் சேது எனப் பொறிப்போம். அரசமாதேவி, சேது என்றால் பல அர்த்தம் இருக்கிறது. அணை, எல்லை, கடல், வழிப்பாதை, பாலம் எனப் பலவாறாகும்."

## சேதுகாவலன்

"அதனால் தான் இராமர் கட்டிய பாலத்தை சேது பாலம் என்றழைக்கின்றனர். இராமேஸ்வர தீவையும் சேது என்பார்கள். யாழ்ப்பாண அரசர்களுக்கு இன்னொரு பெயர் சேதுகாவலன் அல்லவா? "

"சரியாகவே சொன்னாய், கோட்டகம கல்வெட்டில் சேது என எம்முன்னோர்கள் பொறித்துள்ளனர். செகராச சேகர மாலையில் சேதுகாவலன் எனக் குறித்துள்ளது. உம்பர் வந்திறைஞ்சும் சேது உயர் கரைக்காவலன் எனவும் ஒரு நூல் கூறும். செகராசசேகரரை தட்சண கைலாச புராணம் ஓர் இடத்தில் இடபவான் கொடி எழுதிய பெருமாள் என்று கூறும். சேது நாணயத்தின் ஒரு பக்கத்தில் சேது என்ற எழுத்தும் மறுபக்கத்தில் குத்து விளக்கு, மயிலின் தலை, திரிசூலம், பிறைச்சந்திரன் என்பன காணப்படும். இன்று இந்த நாணயங்களை வார்க்கும் பொறுப்பை அண்ணர் பரநிருபசிங்கர் ஏற்றுள்ளார். அவருடைய மாளிகையின் நில அறைகள் நாணய வார்ப்பு ஆலைகளாக விளங்குகின்றன.

அரண்மனைவாயிலூடாக பயண வண்டில் ஒன்று பிரவேசித்தது. அலங்காரமாண அந்த வண்டிலைத் தம்பலகாமத்து எருதுகள் இரண்டு இழுத்தன. அவற்றின் வாய்களில் நுரை கக்கியதிலிருந்து வெகுதூரத்தில் இருந்து புறப்பட்டு வருவது புரிந்தது. அந்த வண்டிலைத் தொடர்ந்து புரவி ஒன்றும் பிரவேசித்தது.

தேவி, நெடுந்தீவு வெடியரசன் மழவ மாப்பாணர் என்னைக் காண விரைந்து வருகிறார். அவரைத் தொடர்ந்து புரவியில் கனகராஜன் வருகிறான். நான் கீழே செல்கிறேன்."

மழவமாப்பாணர் மிகுந்த ஆவேசத்துடன் காணப்பட்டார்.

"பிரடுவண்ணியரின் தொல்லை திரும்பவும் தொடங் கிவிட்டது. முதல்நாள் இரவு தீவுகளுக்கு வந்து மாடு களைக் களவாடி நடுக் கடலில் நங்கூரமிட்டிருந்த போத்துக் கேயருக்கு இறைச் சியடிப்பதற்கு விற்றுள்ளார் கள்."

"அதுவரை நீங்கள் எங்கே?"

"நயினா தீவு போயிருந்தோம் மன்னா. களவாடப்பட்ட பெரும்பாலான மாடு கள் இராமேஸ்வரம் சிவா லயத்திற்காக வளர்க்கப் பட்டவை. சங்கிலி மன்னன் கொதிப்படைந்தான்.

(தொடரும்)

# அமெரிக்காவின் அடுத்த கட்ட நகர்வு என்ன?

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் உள்ள பல விடயங்கள் தேசிய செயற்றிட்டத்தில் இருந்தால், விரைந்து செய்து முடிக்கலாம்.

சில விடையங்கள் அனைத்துலக கண்காணிப்பில் உள்ளன. உதாரணமாக, 2006 ஆம் ஆண்டு திருகோண மலையில் 5 மாணவர்கள், படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் அதே ஆண்டு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் 17 உதவிப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்க வேண்டும் என்ற நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

இந்த கொலைகள் குறித்து ஏற்கனவே ஆணைக்குழு விசாரணை நடத்தப்பட்டது. ஆனால், இப்போது, ஆறு ஆண்டுகள் கழிந்தும் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

கட்டாயமாகவும், தன்னிச்சையின்றியும் காணாமற்போனவர்களைக் கண்டு பிடிக்க ஆணைக்குழு வொன்றை நியமிக்க நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரை சிறப்பு ஆணையாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. நடமாட்ட சுதந்திரம் கூட இன்னமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம், காணமாற்போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்க கொழும்புக்கு வந்தபோது வவுனியாவில் தடுக்கப்பட்டதை நாம் கண்டோம். நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றங்கள் குறித்து, இலங்கை அரசாங்கம் இராஜதந்திர சமூகத்துக்கு தொடர்ச்சியாக விளக்கமளித்து வருகிறது.

இதனை நாம் மதிக்கிறோம். ஆனால், உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்கான சில முக்கியமான நடவடிக்கைகள் இன்னமும் கூட முன்னகர்த்தப்படவில்லை. அதிகாரப் பகிர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசாங்கம் பேசவேண்டியது முக்கியமானது.

சரியான உரிமையாளர்களிடம் சொத்துக்கள் ஒப்படைக்கப்பட வேண்டியது முக்கியமானது.

நிலுவையில் உள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதும் அவசியமானது.

நிச்சயமாக, மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பவது மட்டுமன்றி, அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்கு திரும்ப வேண்டும்.

இதன் அர்த்தம் விவசாயிகள் தமது விவசாய நிலங்களுக்கு மீள திரும்பிச் செல்லக் கூடியதாக இருக்கவேண்டும். மீனவர்கள் கடலுக்குச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும்.

இலங்கையின் ஏனைய குடிமக்களைப்போன்று முன்னாள் மோதல் பிரதேசங்களில் உள்ள மக்கள் எந்தத் தலையீடும் இன்றி வாழக்கூடியதாக இருக்கவேண்டும்.

எனவே, தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, இலங்கை அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று 2013 இன் தொடக்கத்தில் அமெரிக்க அரசாங்கம் பார்த்தது.

நாம் நாடு முழுவதிலும் உள்ள நிலைமைகளை பார்த்தோம். இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதிகளையும், அடையப்பட்ட இலக்குகளையும் ஒப்பீடு செய்தோம்.

முதலாவது தீர்மானத்துக்கு வழிவகுத்த, ஒன்று அல்ல பல கவலைகள் இன்னமும் இருப்பதையும், சில விடயங்களில் நிலைமைகள் மோசமாகியுள்ளதையும்; நாம் புரிந்து கொண்டோம். அப்போது அமெரிக்கா [illegible] ஆலோசனை நடத்தியது.



கொழும்பில்- அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சீசன் வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தில் நிகழ்த்திய உரையின் பகுதி-02

இலங்கை நிலைமைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்ற ஒருமித்த கருத்து அனைத்துலக சமூகத்திடம் பரந்தளவில் இருப்பதைக் கண்டு கொண்டோம்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் குறித்து பல நாடுகள் கவலைகளைப் பகிர்ந்து கொண்டன.

நாம் நல்லிணக்கம் அல்லது பொறுப்புக்கூறல் என்று பேசும் போது அமெரிக்கா அதுபற்றி எவ்வாறு அர்த்தம் கொள்கிறது என்று சிலர் என்னிடம் கேட்டார்கள்.


நல்லிணக்கம் என்பது, ஒன்றுபட்ட நாட்டில், அமைதியாகவும், பாதுகாப்புடனும், நல்லிணக்கத்துடனும் இணைந்து வாழ்வதற்கான வழி, ஜனநாயக நாடு ஒன்றில் எல்லோருக்கும் சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், நிலம், வேலை வாய்ப்பு, கல்வி, போன்றவற்றை பகிர்ந்து கொள்வதற்கும் உரிமை உள்ளது.

பொறுப்புக்கூறல் என்றால், மீறல்களைப் புரிந்த, இத்தகைய செயற்பாடுகளினால் பின்விளைவுகளுக்குக் காரணமான, கடமையை செய்யத் தவறிய- பொறுப்பானவர்களை அடையாளம் காணுதல் என்பதே எமது அர்த்தம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# மன்னவன் யாரோ?




புவனகிரி மன்னன் தனது முதிய வயதில் வாரிசில்லாமல் இறந்துபோக இராச்சியத்தில் குழப்பமும் கலவரமும் ஏற்பட்டது. அண்டை இராச்சியமான விஜய புரியை ஆண்டு வந்த மன்னனே அதற்கெல்லாம் காரணமாக இருந்தான். பல ஆண்டுகளாக புவன கிரியைக் கைப்பற்ற திட்டமிட்டுக் காத்திருந்த அவன் இதுவே புவனகிரி மீது படையெடுக்க சரியான தருணம் என எண்ணி அங்கு உள்நாட்டுக் கலவரத்தைத் தூண்டி விட்டான். அந்த நிலையில் தான் படையெடுத்தால் வெற்றி நிச்சயம் என எண்ணி படையெடுக்க ஆயத்தம் செய்து கொண் டிருந்தான்.

புவனகிரியின் ராணியும் வயது முதிர்ந்தவளாக இருந்தாள். அத னால் ராஜ்யத்தை தன்னால் ஆள முடியாது என்று எண்ணிய ராணி முதன் மந்திரி சகாதேவரை அழைத்து உடனடியாக இராச்சியத்திற்கு ஒரு வாரிசைத் தேர்வு செய்ய சொன்னாள். உடனே அதற்கான ஏற்பாடுகளை செய்த சகாதேவர் தானே நேரடியாக பல குருகுலங்களுக்குச் சென்று அங்கி

## அம்புலிமாமா கதைகள்

ருந்து பல இளைஞர்களை அழைத்து வந்து அவர்களை மேலும் பலசோதனைகளில் ஈடுபடுத்திய பின் இறுதியில் அரியனையில் அம ரத் தகுதியுள்ளவனாக இருவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களில் ஒருவர் சாரங்கன். மற்றையவன் பூபதி.

அவ்வளவு தூரம் மிகவும் சிரமப்பட்டு வாரிசுகளை தேர்வுசெய்த சகாதேவனுக்கு இறுதிச்சுற்றில் அந்த இருவரில் ஒருவரை தேர்வு செய்வது தான் மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் எல்லா விதத்திலும் சமமாக இருந்தனர். அவர்களில் ஒருவனை எப்ப டித்தேர்வு செய்வது என்பது பற்றி நீண்டநாட்கள் ஆலோசித்தபின் அவருக்கு ஒரு யோசனை தோன்ற அவர் சாரங்கன், பூபதி இருவரை யும் சபைக்கு அழைத்தார். சபை யோர் முன் அவர்களை அறிமுகப்ப டுத்திய பின் சகாதேவர் சபையோரை நோக்கி சபையோர்களே இவர்கள் இருவருமே அரசபீடத்தில் அமரத் தகுதி பெற்றவர்கள்தான். அதனால் இவர்களில் ஒருவரை மட்டும் தேர்வு செய்வதில் மிகக் கடினமாக உள்ளது. இப்போது என் யோசனைப் படி இவர்கள் இருவருக்கும் ஒரு கடுமையான சோதனை வைக்கப் போகிறேன். அதுவே இறுதிச் சோதனையாகும். நாட்டில் எங்கு பார்த்தாலும் கலகமும் பூசலும் உண்டாகி அமைதி சீர்குலைந்து உள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த இருவருக்கும் அதை சீர் செய்யும் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன். இவர்களுடைய சாதனையைப் பொறுத்து இவர்களில் ஒருவரைத் தேர்வு செய்வேன். இதற்குச் சம்மதமா என்று



கேட்க அதற்கு அனை வரும் சம்மதித்தனர்.

பின்பு சகாதேவர் சாரங்கனையும் பூபதியையும் நோக்கி வீரவாலிபர்களே நமது மகாராஜாவின் மரணத்திற்குப் பின் அரியாசனம் ஏற அவருக்கு வாரிசு இல்லாததால் நமது பகைவர்கள் வேண்டுமென்றே உள்நாட்டுக் கலவரத்தை தூண்டி வருகின்றனர். நமது இராச்சியத்தில் பகைவர்களுக்கு உதவிசெய்யும் துரோகிகளும் உள்ளனர். நீங்கள் இருவரும் மக்களிடையே சென்று அவர்களை அமைதிப்படுத்த வேண்டும். நம்முடைய இராச்சியத்தில் ஊடுருவியுள்ள பகைவர்களையும் நம்நாட்டுத் துரோகிகளையும் கண்டுபிடித்து கைது செய்யுங்கள். கலகத்தை அகற்றி அமைதியை அங்கு நிலைநாட்டுங்கள். உங்கள் சாதனையை பொறுத்து உங்களில் ஒருவரை நான் பட்டத்துராஜாவாக தேர்வு செய்வேன் என்றார்.

அதற்கு இருவரும் மந்திரியாரே ஆட்சி பீடத்தில் அமருவதற்கான போட்டி இது என்று நாங்கள் எண்ணவில்லை. நம் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதை எங்கள் கடமையாக எண்ணிச் செயற்படுகிறோம். அதன் பின்பு எங்கள் முயற்சிகளையும் சாதனைகளையும் பார்த்து யார் தகுதியானவர் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் என்றனர்.பின்பு இருவரும் ஒரு சிறிய படையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு ராஜ்யம் எங்கும் பயணிக்கத் தொடங்கினர். சென்ற இடங்களில் எல்லாம் குடிமக்களை அழைத்துத் தாங்கள் காலஞ்சென்ற மன்னரின் பிரதிநிதிகள் என்றும் ராஜ்யத்தில் அமைதியை நிலைநாட்டவே வந்ததாகவும் எடுத்துரைத்தனர். பகைவர்கள் வேண்டுமென்றே தவறான வதந்திகளை மக்களிடையே பரப்பி குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கி வருகின்றனர் என்றும் அந்த வதந்திகளை நம்பி கலகத்தில் ஈடுபட வேண்டாமென்றும் புத்திமதி கூறினர்.

பெரும்பாலான இடங்களில் பெரும்பாலான மக்கள் நாட்டுப்பற்று மிக்கவர்களாகவே காணப்பட்டனர். நாட்டின் அமைதியையே விரும்பிய அவர்கள் சாரங்கன், பூபதி ஆகியோரின் புத்திமதிகளை செவிமடு த்துக் கேட்டனர். ஆனால் ஒவ்வொரு இடத்திலும் ஒரு சில கலகக்காரர்கள் பொதுக் கூட்டத்தில் வேண்டுமென்றே




கலகத்தை உண்டாக்கி வன்முறையில் ஈடு பட்டு பொதுச்சொத்துக்களை நாசம் செய்து மக்கள் மனதில் அச்சத்தை உண்டாக்கி அயல்நாட்டு ஆட்சியில்தான் அமைதி நிலவும் என்ற கருத்தை வலியுறுத்தினர். பல இடங்களில் புத்திசொல்ல வந்த சாரங்கன், பூபதி ஆகியோரையே கலகக்காரர்கள் தாக்கினர். கூடவே அழைத்து வந்திருந்த படைவீரர்க ளின் துணைகொண்டு அத்தகைய கலகக்காரர்கள் அனைவரையும் இரு வாலிபர்களும் சிறை பிடித்தவர்களுடன் அழைத்துச்சென்றனர். ஒரு சில மாதங்களிலேயே அயல்நாட்டுப் பகைவர்களும் உள்நாட்டுத் துரோகிகளும் வன்முறையாளர்களும் கண்டுபிடிக்கப் பட்டு சிறைபடுத்தப்பட்டனர். நாட்டில் கலகம், சண்டை, சச்சரவுகள் மறைந்து பழையபடி அமைதி நிலவியது.

இராச்சியத்தின் பிரச்சினைகளைக் களைந்து அமைதியை நிலைநாட்டிய சாரங்கனும் பூபதியும் தலைநகருக்குத் திரும்பியதும் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மறுநாள் சபையில் அமைச்சர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கூடியிருக்க அவ்விருவரையும் கௌரவி க்க மகாராணியே வந்திருந் தாள். இருவரும் சிறைபிடித்து வந்த அந்திய நாட்டுக் கலகக்காரர்களும் உள்நாட்டு துரோகிகளும் சபை வாசலில் கைதிகளாக நிறுத்தப் பட்டிருந்தனர்.

இருவரையும் பிரதம மந்திரி சகாதேவர் மனமாரப் பாராட்டிய பின்பு சாரங்கனை நோக்கி இளைஞரே! நீ சிறைபிடித்து வந்திருப்பவர்களின் குற்றம் என்னவென்று கூறமுடியுமா? என்று வினவினார்.

அதற்கு சாரங்கன் என்னைத் தாக்கியவர்களைப் பரப்பியவர்கள் என்னுடைய தற்காப்புக்காக கைது செய்தேன் என்றான். அதேகேள்வியை பூபதியிடம் கேட்க அவன் மக்களிடையே வீணாக வதந்திகளை பரப்பியவர்கள் கலகம் மூட்டியவர்கள், பொதுச் சொத்துக்களை நாசம் செய்தவர்களை சிறைபிடித்து இருக்கிறேன் என்றான்.

உடனே சகாதேவர் மகாராணியிடம் சென்று சிறிது நேரம் ஆலோசனை செய்தபின் பூபதியே ஆட்சி பீடத்தில் அமரத் தகுதியானவன் என்று அறிவித்தார். பின்னர் அவர் அதன் காரணத்தையும் விளக் கினார். இருவருமே திறமையிலும் வீரத்திலும் சமமானவர்கள். ஆனால் பிரச்சினைகள் அவர்கள் அணுகிய முறை வேறாக இருந்தது. தன்னைத்தாக்கியவர்களை மட்டுமே சிறைபிடித்தான் சாரங்கன். ஆனால் பூபதி நாட்டின் நலத்தைச் சீர்குலைத்தவர்களை மட்டுமே சிறைபிடித்தான். இவ்வாறு தன்னலம் கருதாமல் நாட்டின் நலம் கருதி செயற்பட்ட பூபதியே புவனகிரியை அரசாளத் தக்கவன் என்பது எங்கள் முடிவு.சகாதேவரின் தீர்ப்பைக் கேட்டு சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிகள் இடமாற்றம் குறித்து பொதுநலவாய செயலகம் கேள்வி

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நீதிபதிகளின் இடமாற்றங்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் செயலகம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடமையாற்றும் 240 நீதிபதிகளில் 80 நீதிபதிகள் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் தலைமையிலான நீதித்துறை ஆணைக்குழுவினால் இடமாற்றப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த அவசர இடமாற்றங்கள் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# அமைச்சுகள் புத்தியுடன் செயற்பட வேண்டும்

## அமைச்சர் டியூ அட்வைஸ்

(கொழும்பு)

வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கள் புத்தியுடன் செயற்பட வேண்டுமென அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அமைச்சின் பேச்சாளர்கள் எதிர்காலத்தை கவனத்திற்கொண்டு கருத்து வெளியிட வேண்டும். பொருத்தமற்ற சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. உலகப் பொருளாதார முறைமை காணப்படும் நிலைமை சர்வதேச நாடுகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

ஆர்.பிரேமதாச, ஜே.ஆர்.ஜயவர்த்தன போன்ற ஜனாதிபதிகள் இந்தியாவை பகைத்துக் கொண்டதனால் ஏற்பட்ட விளைவுகளை கவனத்திற்கொண்டு இந்தியாவுடனான முரண்பாடுகளை தவிர்க்க வேண்டும்.

சில அடிப்படைவாத சக்திகள் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பகைமைப்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

சிங்கள தமிழ், சிங்கள முஸ்லிம் பிளவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கப்படுவதால் வெளிநாட்டு சக்திகள் நாட்டின் விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடிய சாத்தியம் ஏற்படும் என அவர் சுட்டிக் காட்டினார். (அ-2)

# எச்சரிக்கை; போலிப்பொலிஸ்!

(கொழும்பு)

போலிப் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என போலியாகத் தெரிவித்து மக்களிடம் பணம் கொள்ளையிடும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்து மக்களிடம் கப்பம் கோரப்பட்டு வருகிறது.

புலிகளுடன் தொடர்புகளைப் பேணியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்க குறிப்பிட்ட தொகைப் பணத்தை வைப்பிலிடுமாறும் இந்த போலிப் பொலிஸ் கும்பல் கோரி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

தேவையற்ற பிரச்சினைகளுக்கு அஞ்சிய சிலர் கேட்கும் பணத்தை கொடுத்து விட்டு அமைதியாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு பணத்தை கொடுக்காது இவ்வாறான அழைப்புக்கள் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (எ-11)

# மக்களின் பிரச்சினைகளை அரசு புரிந்து கொள்ளவில்லை

போர் இடம்பெற்ற காலத்தை விடவும் தற்போது மக்கள் அழுத்தங்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் அரசாங்கம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவ்தாக வாக்குறுதி அளித்த போதிலும் இதுவரையில் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மக்களின் பிரச்சினைகளை புரிந்துகெண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. பாரியளவில் நாடு அபிவிருத்தி அடைந்து வருவதாக பிரசாரம் செய்த போதிலும் மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடக் கூடியளவு சாதக மாற்றங்கள் ஏற்படவில்லை.

மாறாக மக்கள் நாளுக்கு நாள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. அண்மையில் பாராளுமன்ற நெறிகளுக்கு புறம்பான வகையில் சில சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த சட்டங்களினால் மக்கள் மீதான வரிச்சுமை மேலும் அதிகரித்துள்ளது என கயந்த கருணாதிலக்க மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் 50 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் 2012 ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிகளுக்காக 495 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டன. எனினும் 2012 ஆம் ஆண்டில் அது அரைவாசியாக குறைந்திருந்தது.

இறக்குமதி தீர்வையின் அதிகரிப்பு மற்றும் ரூபாயின் பெறுமான வீழ்ச்சி என்பனவே வாகன இறக்குமதி வீழ்ச்சிக்கான காரணம் என்று இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (அ)




★1450-பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததால் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிபுக்கு வந்தது.

★1755-சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகராதியை வெளியிட்டார்.

★1815-சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.

★1865-ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் இறந்தார். ஆன்ட்ரூ ஜோன்சன் அமெரிக்காவின் 17 ஆவது ஜனாதிபதியானார்.

★1892-ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.

★1912-இரண்டு மணி 40 நிமிடங்களுக்கு முன்னர் பனிப்பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் வட அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியதில் ஆயிரத்து 503 பேர் பலியாகினர்.

★1923-இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப்பட்டது.

★1940-இரண்டாம் உலகப் போர்: நாசிப் படைகளினால் கைப்பற்றப்பட்டிருந்த நோர்வேயின் நார்விக் நகர் மீது கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின.

★1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் 200 போர் விமானங்கள் வட அயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகர் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் நாசிகளின் பேர்ஜேன்- பெல்சன் வதை முகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.

★1986- லிபியா மீது ஐக்கிய அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தியது.

★1989-இங்கிலாந்தின் ஹில்ஸ்பரோ காற்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 96 பேர் உயிரிழந்தனர்.

★1976-தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1452-லியனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர் (இ.1519)

★1469-குருநானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (இ.1539)

★1707-லியோனார்டு ஆய்லர், சுவிட்சர்லாந்து நாட்டின் கணிதவியலாளர்(இ.1783)

★1874-ஜொகான்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர்(இ.1957)


★1896-நிக்கொலாய் செமியோனொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (இ.1986)

★1907-நிக்கலாஸ் டின்பேர்ஜென்,நோபல் பரிசு பெற்றவர் (இ.1988)

### இறப்பு

★1980-ஜீன்- போல் சார்ட்டெர், நோபல் பரிசினை ஏற்க மறுத்த பிரெஞ்சு மெய்யியலாளர் (பி.1905)

### டைட்டானிக்



ஆர்.எம்.எஸ். டைட்டானிக் (RMS Titanic) என்பது ஒரு ஆடம்பர பயணிகள் கப்பல் ஆகும். இது வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவாக்கப்பட்டது. 1912 ஆம் ஆண்டு முதன் முதலாகச் சேவைக்கு விடப்பட்ட போது இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலாகவிருந்தது.

டைட்டானிக் தனது முதற் பயணத்தை இங்கிலாந்தின் சௌதாம்ப்டன் துறைமுகத்தில் இருந்து நியூயோர்க் நகரை நோக்கி 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி புதன்கிழமை கப்டன் எட்வர்ட் சுமித் தலைமையில் ஆரம்பித்தது.

டைட்டானிக் மூன்று வகுப்புக்களைக் கொண்டிருந்தது. மூன்றாவது கீழ் வகுப்பில் பொதுவாக அமெரிக்காவில் குடியேறுவதற்காக சென்றவர்களே அதிகமாக இருந்தனர். முதல் வகுப்பில் பல புகழ்பெற்ற கோடீஸ்வரர்கள் இருந்தார்கள்.

கடல் மிகவும் அமைதியாக இருந்தது. 1.45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது. ஆனாலும் இச்செய்தி டைட்டானிக்கை அடையவில்லை.

1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி இரவு 11.40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பலை மோதாமல் திருப்பும் முயற்சி நிறைவேறததால் கப்பல் முற்றாக நிறுத்தப்பட்டது. கப்பலில் மொத்தம் 20 உயிர் காப்பு படகுகள் இருந்தன. முதலாவது படகு 12.40 இற்கு இறக்கப்பட்டது. முதலாம், இரண்டாம் வகுப்புப் பயணிகளுக்கு படகுகளில் ஏறுவது சுலபமாக இருந்தது. ஆனால் மூன்றாம் வகுப்புப் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. கப்பலில் இருந்து ஆபத்து சமிக்ஞைகள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டன. அண்மையில் இருந்த சில கப்பல்கள் செய்திகள் அனுப்பின. ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி அதிகாலை 2.20 மணிக்கு கப்பல் முற்றாக மூழ்கியது. இதில் மொத்தம் இருந்த பயணிகள் 2 ஆயிரத்து 223 பேரில் 706 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் கடலில் குளிர் தாங்காமையினால் உயிரிழந்துள்ளனர்.

டைட்டானிக் கப்பல் அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில் நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அது மூழ்கவே முடியாததெனவும் கருதப்பட்டது. இப்படியான ஒரு கப்பல் மூழ்கியது உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கப்பலின் சேதமடைந்த பகுதிகளை 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதி ரொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு கண்டுபிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## மீனம்

**புரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**வைகாசிக்கு மேல் வளர்ச்சி தரும் வருடம்!**

**எதையும் தள்ளி வைக்காமல் உடனே செய்ய வேண்டுமென்று சொல்லும் மீன இராசி நேயர்களே!**

விஜய ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் குரு, பகை வீட்டில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் சனி வக்ரம் பெற்றிருக்கின்றார். அத்தோடு ராகுவும் இணைந்து சஞ்சரிக்கிறார். இதற்கிடையில் பிறக்கும் புத்தாண்டு எண்ணற்ற மாற்றங்களை உங்களுக்கு கொடுக்கப்போகிறது. வருடத் தொடக்கத்தில் சேமிப்பு கரைந்தாலும், வைகாசிக்கு மேல் மீண்டும் உயரும்.

மிதுன குருவின் சஞ்சாரம் ஏற்படும் பொழுது, சனி, ராகு ஆகியவற்றின் மீது பதிகிறது. எனவே, அஷ்டமத்தது சனி மற்றும் அஷ்டமத்து ராகுவின் ஆதிக்கதிலிருந்து ஓரளவு விடுபட்டு நல்ல பலன்களை நீங்கள் காண இயலும். சுபகாரிய பேச்சுக்களில் ஏற்பட்ட தடைகளை அகற்றும் தன்மை குருவின் பார்வைக்கு உண்டு. எனவே, மிதுன குருவின் சஞ்சாரத்திற்கு பிறகு உங்களின் எண்ணங்கள் பாதிக்கு மேல் நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. வீடுகட்டுவது முதல் வெளிநாட்டு பயணம் வரையில் ஏற்பட்ட தடைகள் ஒவ்வொன்றாக அகல வேண்டுமானால், வியாழ பகவானுக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வதோடு சுய ஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் செய்வது நல்லது.

வாக்கு ஸ்தானத்தில், எதிரிகள் ஸ்தானாதிபதி சஞ்சரித்து வருடம் தொடங்குவதால் வனதுர்க்கை, விஸ்ணு துர்க்கை, சௌபாக்கிய துர்க்கை போன்ற தெய்வங்களை வழிபாடு செய்வது வளர்ச்சிக்கு வித்திடும்.

**தேச பக்தியும் தெய்வ பக்தியும் மிக்கவர்கள்!**

நீங்கள் ஆசைகளை வெளிக் காட்டிக்கொள்ளமாட்டீர்கள். அடுத்தவர்களுக்காக பாடுபடுபவர்களின்

> **நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்தயோகத்தில், *விஜய* வருடம் பிறந்துள்ளது.**

பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களை கரை ஏற்றிவிடும் ஏணியாகவும் தோணியாகவும் விளங்கும் நீங்கள் திருமணத்திற்குப் பிறகே அதிக முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

தெய்வ பக்தி மிக்கவர்களாக விளங்கும் நீங்கள் தேசபக்தி கொண்டவர்

## தொழில் வளர்ச்சி மேலோங்கும் வருடம்

களாகவும் விளங்குவீர்கள். உங்கள் இராசி நாதனாக குரு இருப்பதால் நீங்கள் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள்.

**புத்தாண்டின் தொடக்கம் புதிய வாழ்வின் திருப்பம்!**

விஜய ஆண்டு தொடங்கும் பொழுது உங்கள் ராசிநாதன் குரு, சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு 5-க்கு அதிபதி சந்திரனும் இணைந்திருக்கிறார். எனவே, பிள்ளைகளால் பெருமை சேரும். தன ஸ்தானத்தில் 4 கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அஷ்டமாதிபதியும், 6-க்கு அதிபதியும் இணைந்து ஆண்டின் தொடக்கம் அமைவதால் விபரீத ராஜயோக அடிப்படையில் ஆண்டின் தொடக்கத்திலேயே நல்ல காரியங்கள் நடைபெறத் தொடங்கும். அஷ்டமத்து சனியின் ஆதிக்கத்தின் ஒரு பங்கு நடைபெற்றுவிட்டதால், இனி அதிக பட்சமான பாதிப்புக்கள் உங்களுக்கு ஏற்படாது. இருப்பினும் சனிக்கிழமை தோறும் சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது. வைகாசிக்கு மேல் குரு நான்



காம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிகிறது. எனவே, தொழில் வளர்ச்சி மேலோங்கும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் கூடும். எனவே இந்தப் புத்தாண்டு தொடங்கும் பொழுதே குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். முல்லைப்பூ மாலை அணிவித்து, மஞ்சள் வண்ண வஸ்திரம் சாற்றி குரு தெட்சணா மூர்த்தியை வழிபட்டால் நற்பலன்கள் கிடைக்கும்.

**அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் என்ன செய்யும்?**

இதுவரை உங்கள் ராசிக்கு முன்றாமிடத்தில் சஞ்சரித்துவந்த குருபகவான் வைகாசி மாதம் 14 ஆம் திகதி 28.05.2013 அன்று மிதுன ராசியில் 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசிக்கு 8,10,12, ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். இதன் விளைவாக இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்புக் கைகூடி வரும்.

ஊர்மாற்றம் தொழில் ஸ்தானத்தில் இடமாற்றம், போன்றவைகள் உருவாகலாம். அங்கனம் மாற்றங்கள் வரும் பொழுது உங்களுக்கு யோகம் தரும் திசைபார்த்து தொழில் நிலையங்களை அமைத்துக் கொண்டால் தொல்லைகள் ஏற்படாது.

குருவின் சப்தம பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்திலிருப்பவர்கள் வேலைப் பளு கூடுதலாக இருக்கிறதே என்று நினைத்து விலக முன்வருவர். ஆனால், அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இன்னும் இருப்பதால் எங்கு வேலைக்குச் சென்றாலும் இதே நிலை ஏற்படும். சிலர் வி... வேலையை விட்டுவிட்டு வேறு தொழில் செய்யத் தொடங்கலாமா? என்று யோசிக்கத் தொடகுவர். ஆனால், உங்கள் யாதகமே பிறருக்காகப்பாடுபடும் ஜாதகம்தான். நீங்கள் வேலை செய்யும் நிறுவனம் தழைக்கும். எனவே, விலகிக் கொள்வதாக சொன்னாலும் விடமாட்டார்கள்.

அப்படி இருக்கும் பட்சத்தில் நீங்கள் குடும்ப உறுப்பினர்களில் யார் பெயரில் தொழில் செய்தால் நல்ல இலாபம் கிடைக்கும் என்பதை அவர்களது ஜாதகத்தை ஆராய்ந்துபார்த்து தேர்ந்தெடுத்து செய்வதோடு அதை நிர்வகிக்கும் பொறுப்பை மட்டும் மட்டும் நீங்கள் ஏற்கலாம்.

12 ஆம், இடத்தையும் குரு பார்க்கிறார். எனவே, அடிக்கடி பயணங்கள் அதிகரிக்கும் வாகன மாற்றம் செய்வீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினை தீரும்.

**மந்தன் சனி தரும் மாற்றங்கள்!**

சனி உங்கள் ராசிக்கு 11,12 அகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். 8-ம் இடத்தில் உச்சம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும்01.03.2014 முதல் 13.04.2014 வரையிலும் வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரெம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் சனி-செவ்வாயின் பார்வைக் காலம் ஏற்படுகிறது. இது போன்ற காலங்களில் அதிக விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது.

உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மை தான். என்றாலும் 11 இற்கு



அதிபதியாகவும் இருந்து வக்ரம் பெறுகிறார் அல்லவா? இலாபாதிபதி வக்ரம் பெறும் இந்த நேரத்தில் இலாபம் பெறுவதில் தடைகள் ஏற்படலாம். சேமிப்புகள் கரையும்.

பிறரை நம்பிக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற இயலாது. கூட்டாளிகளை மாற்றம் செய்து ஏற்ற தொழிலுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நினைப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் மீண்டும் நடைமுறைக்கு வந்து பிரிவினைகள் சரியில்லையென்று வழக்கு வரலாம்.

எதிரிகள் பலம் மேலேங்கியிருக்கும் நேரத்தில் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. அதிக வருமானங்கள் வருவதில் தடைகள் ஏற்படலாம். உள்ளத்திலும் அமைதி குறையலாம். இதுபோன்ற காலங்களில் சனிபகவான் சந்நிதிக்குச் சென்று அன்னதானம், வஸ்திர தானங்களையும் செய்வதில் ஆர்வம் காட்டுவது நல்லது. சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபாடு செய்யுங்கள்.

**குருவின் வக்ர காலமும் செவ்வாயின் வக்ர காலமும்!**

13.11.2013 முதல் 12.03.2014 வரை மிதுனத்தில் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10- ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் உள்ள குரு வக்ர இயக்கத்தில் இருக்கும்போது, உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் வரலாம். புதிதாக வாங்கிய வாகனம் கூட பழுதாகிச் செலவு வைக்கிறதே என்று வேதனைப்படுவீர்கள். அது சரியானால், வீட்டிலுள்ள மின்சாதனப் பொருட்கள் பழுதடையும். இப்படி வருவதால், வீண் விரயங்கள் ஏற்படலாம். அதேநேரம் வீட்டில் நடைபெறவேண்டிய சுபகாரியங்கள் பிள்ளைகளின் திருமண விழாக்கள் பெற்றோர்களின் பிறந்தநாள் விழாக்கள் போன்றவற்றை நடத்தி அன்ன தானங்கள் செய்வதிலும் ஆர்வம் காட்டினால் விரயங்களை சுபவிரயங்களாக மாற்றியமைத்துக்கொள்ள முடியும்.

தொழில் கூட்டாளிகள் உங்களுக்கு இணக்கமாக நடந்துகொள்வார்களா என்பது சந்தேகம்தான். அவர்கள் வசம் தொழிலை ஒப்படைத்திருந்தால், அடிக்கடி சென்று பார்த்துக் கொள்வது நல்லது. இல்லையேல்

> **பலன் தரும் பரிகாரம்!**
>
> **வியாழக்கிழமைதோறும்குருதட்சணா மூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். குரு கவசம் பாடினால், குறைபாடுகள் அகலும். சிவன், உமை தலங்களுக்குச் சென்று வழிபாட்டை மேற்கொண்டு இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.**

லாபம் ஏட்டில் எழுதியிருக்குமே தவிர எதிரில் வந்து சேராது. எனவே, கண்காணிப்பு அதிகம் தேவைப்படும காலமாக இக்காலம் கருதப்படுகிறது.

எனவே, செவ்வாயின் வக்ர காலத்தில் கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக்கொள்ள நேரிடும். பொதுநலத்தில் இருப்பவர்கள் கொஞ்சம் விலகி இருக்கும் காலமாக

> **மீன இராசிப் பெண்கள் யோசித்துச் செயற்படுவதன் மூலம் யோகம் பெறும் ஆண்டு இது. முதல்இரண்டு மாதங்கள் மன நிம்மதிக்குறைவு ஏற்பட்டாலும், வைகாசிக்கு மேல் வளர்ச்சி வந்து சேரும்.**
>
> **என்ன இருந்தாலும் அஷ்டமத்துச் சனி, அஷ்டமத்து ராகு ஆதிக்கம் இருக்கும் பொழுது சனிக்குரிய வழிபாடுகளையும், ராகுவிற்குரிய வழிபாடுகளையும் செய்வது நல்லது. வருடத்தின் மையப்பகுதியில் உறவினர் பகை உருவாகலாம். உடன் இருப்பவர்களிடம் உங்கள் குடும்ப இரகசியங்களைச் சொல்வதை தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவிக்குள் கனிவு கூடவும், ஒற்றுமை பலப்படவும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும்.**

அமையும். முன்கோபத்தையும் பிடிவாதத்தையும் கொஞ்சம் தளர்த்திக் கொண்டுசெயற்பட்டால் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடகொரியா மீது தாக்குதல் நடத்த எமது இராணுவத்தளத்தை பயன்படுத்துங்கள்

## அமெரிக்காவை அழைக்கிறது பிலிப்பைன்ஸ்

(மணிலா)

**வடகொரியா சமீபத்தில் இரு அனுகுண்டு சோதனைகளை நடத்தி உலக நாடுகளின் கவனத்தை திருப்பியது. மேலும் தென்கொரியா மீது போர் தொடுப்போம் என்று வடகொரியா மிரட்டல் விடுத்து வருகிறது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.இந்த சம்பவங்களைத் தொடர்ந்து வடகொரியா -அமெரிக்காவிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வட கொரியா மீது தாக்குதல் நடத்த முன்னாள் அமெரிக்காவின் காலனி நாடான பிலிப்பைன்ஸ் முன் வந்துள்ளது.**

இது குறித்து பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் டெல் ரொசாரியோ கூறியதாவது.

அமெரிக்கா அல்லது பிலிப்பைன்ஸ் மீது தாக்குதல் நடத்தப்படும் விடயத்தில் இருநாடுகளும் இணைந்து செயற்படுவது என 1951 ஆம் ஆண்டே பரஸ்பர இராணுவம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கொரிய தீபகற்ப பகுதியில் போர் மூள்வதற்கான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஒப்பந்தப்படி எங்களின் மீதோ அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள எந்த ஒரு நாட்டின் தாக்குதல் நடத்தப்படுமானால் எங்கள் இராணுவ தளங் களை பயன்படுத்தி கொள்ள அமெரிக்காவிற்கு அனுமதி அளிக்கப்படும்.

இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்றார்.

தென் சீனக்கடலில் சீனா அத்துமீறி வரும் நிலையில் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தங்களை புதுப்பித்துள்ளது. அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்



சின் 8 ஆயிரம் இராணுவவீரர்கள் அங்கு போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.இதேவேளை,

**டோக்கியோவை தகர்ப்போம்**

வடகொரியா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுப்பதற்காக ஜப்பான் தலைநகர் டோக்கியோ முழுவதும் இடைமறித்து தாக்கும் ஏவுகணைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் வடகொரியாவை கடுமையாக தாக்கவும் ஜப்பான் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் நாங்கள் தாக்குதல் நடத்த திட்டமிட்டால் முதலாவதாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவை தாக்கி அழிப்போம் என்று வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. அமெரிக்க இராணுவத்திற்கு ஜப்பான் இடமளித்துள்ளதால் கோபமடைந்து இருக்கும் வடகொரியா தாக்குதல் நடத்தக்கூடும் என்றும் அச்சத்தில் ஜப்பானிய அதிகாரிகள் உள்ளனர்.

கொரிய தீபகற்பத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு சென்றுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை என்பது அணு ஆயுதக்குறைப்பு குறித்ததாகவே இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

**அணுகுண்டு சோதனை நடத்தியதாக தகவலில்லை**

இந்நிலையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த வெள்ளை மாளிகை செயலாளர் ஜே. கர்னே கூறியதாவது, வடகொரியாவின் அசைவுகளை அமெரிக்கா தீவிரமாக கண்காணித்து வருகிறது.அதற்கேற்ப எங்கள் தாய்நாட்டையும் நட்பு நாடுகளையும் பாதுகாப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். வடகொரியாவின் அணு திட்ட செயலாக்கத்தையும் மிக நெருக்கமாக கண்காணித்து வருகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக வடகொரியா இதுவரை தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களை இதுவரை சோதித்துள்ளதாக எந்த தகவலும் எங்களுக்கு வரவில்லை என்றார். (அ)

# முபாரக்கின் வழக்கினை விசாரிக்க மறுத்த நீதிபதி



(செய்ரோ)

முன்னாள் எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சிக்கெதிராக மக்கள் போராட்டத்தில் குதித்தபோது இராணுவக்கரம் கொண்டு அப் போராட்டத்தை அடக்க முயன்ற முபாரக் 900 பேரை சுட்டுக் கொன்றதாக தொடரப்பட்டுள்ள வழக்கை மறுவிசாரணை செய்ய நீதிமன்றம் வருகை தந்த நீதிபதி நகரத்தை விட்டு வெளியேறிய சம்பவம் எகிப்திய மக்களிடத்தில் கொதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

அரேபிய வசந்தம் என்ற பெயரில் வளை குடா நாடுகளில் நிகழ்ந்த மக்கள் புரட்சி அரசியல் மாற்றத்தையும் ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்த நிலையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாராக்கின் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித் தெழுந்த போது சுமார் 900 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலை தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் முபாராக்கிற்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கெய்ரோ சிறையில் அடைக்கப்பட்டுள்ள முபாரக்கிற்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டு கோமா நிலைக்கு தள்ளப்பட்டார்.

84 வயதாகும் முபாரக்கிற்கு தற்போது கெய்ரோ இராணுவ வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைய ளிக்கப்பட்டு வரும் நிலையில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு முறையாக விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை. எனவே இந்த வழக்கின் மீது மறு விசாரணை நடத்த வேண்டும் என முபாரக் சார்பில் முறையீட்டு செய்யப்பட்டது.

முபாரக்கிற்கு பின் எகிப்தின் ஜனாதிபதியாக பதவியேற்ற முகம்மது மோர்சி மறு விசாரணைக்கு உத்தரவிட்டு நேற்று முன் தினம் அவ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கெய்ரோவின் புறநகர் பகுதியில் உள்ள பொலிஸ் அக்கடமியில் நடைபெற்ற மறு விசாரணைக்கு ஹோஸ்னி முபாரக்கை தள்ளு வண்டிலில் படுக்க வைத்து அழைத்து வந்தனர்.

நீதிமன்றினுள் நுழைந்த நீதிபதி முஸ்தபா ஹசன் அப்துல்லா இந்த வழக்கை விசாரிப்பதற்கு எனக்கு அசௌகரியமாக உள்ளது. எனவே வழக்கை கெய்ரோவில் உள்ள அப்பீல் நீதிமன்றிற்கு மாற்ற உத்தரவிடுகிறேன் என்று கூறிவிட்டு நீதிமன்றை விட்டு வெளியேறினார்.

நீதிமன்றநடவடிக்கைகள் அனைத்தும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பட்டதோடு இராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும் பெருமளவில் நீதிமன்றில் வெளியே திரண்டிருந்தனர்.

அவர்கள் நீதிமன்றை விட்டு வெளியேறிய நீதிபதியை முற்றுகையிட முயன்றனர்.

உடல் நலம் சரியில்லாத காரணத்தினாலேயே நீதிபதி இந்த வழக்கை விசாரிக்க மறுத்துவிட்டதாக முபாரக்கின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இதேவேளை தள்ளு வண்டிலில் படுத்திருந்த முபாரக்கை பொலிஸார் பாதுகாப்பாக ஹெலிகொப்டரில் கொண்டு சென்று இராணுவ வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (அ-5)




# நீதிமன்றில் ஆஜராகுமாறு முஷாரப்பிற்கு உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கொலை வழக்கின் முக்கிய குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றில் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இக்கொலை தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் தொடரப்பட்டதோடு அவ் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றின் முன்னிலையில் சமூகமளிக்கவேண்டுமென இருமுறை அழைப்பாணை விடுக்கப்பட்ட போதும் அவ்வழக்கு விசாரணையில் முஷாரப் ஆஜராகாமையாலேயே மேற்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 2007 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ ராவல் பிண்டி பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

தொடர்ந்து அங்கு ஆட்சி அமர்ந்திருந்த முஷாரப் பதவியிழந்தபின் வெளிநாட்டிற்குதப்பிச்சென்றிருந்தார்.


பூட்டோ கொலை வழக்கில் அப்போது பாகிஸ்தானை ஆட்சி செய்த முஷாரப்புக்கு தொடர்பு இருப்பதாக 2011ஆம் ஆண்டு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் ராவல்பிண்டி அடியாலா சிறைச் சாலையில் உள்ள தீவிரவாத எதிர்ப்பு நீதிமன்றம் மூடப்பட்ட அரங்கில் இடம்பெற்றது.

எனினும் தேர்தலை முன்னிட்டு நாடு திரும்பியுள்ள முஷாரப் இந்த விசாரணையில் ஆஜராகவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராக இரண்டு முறை அழைப்பாணை விடுக்கப்பட்ட நிலையிலும் இந்த வழக்கில் முஷாரப் ஆஜராகாததால் அவரும் ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களும் எதிர்வரும் 23 ஆம் திகதியன்று விசாரணையில் ஆஜராக வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக நிதிமன்றத்தில் ஆஜராகாத முஷாரப்பை அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதும் குறித்த தீர்ப்பு மீளப் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் ஈழத்தமிழர்கள் உண்ணாவிரதம்



அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் தமிழ் அகதிகளால் கடந்த 8 ஆம் திகதி ஆரம் பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் 7 ஆவது நாளாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விடுதலை செய் அல்லது கருணைக் கொலை செய் என்ற கோரிக்கையுடன் தொடரும் இப் போராட்டத்தில் 25 தமிழர்கள் உட்பட 27 அகதிகள் தமது முடிவுற்ற சிறை வாழ்க்கையால் விரக்தியடைந்து இப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மழைத்தூறலும் பனியும் குளிரும் என நெருக்கடியான மெல்பேர்ன் காலநிலையில் தடுப்பு முகாமின் முற்றத்தில் படுத்திருந்தவாறு தமது உண்ணாவிரத போராட்டத்தை நீரை மட்டும் அருந்தி தொடர்ந்து வருகின்றார்கள்.

இதுவரை ஐந்து பேர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட உடனடியான சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் திரும்பி வந்து உண்ணாவிரதத்தை தொடர்ந்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு ஆதரவாக தடுப்பு முகாமிற்கு வெளியில் கடந்த மூன்று நாட்களாக கவனயீர்ப்பு போராட்டம் வேற்று சமூக மக்களின் ஆதரவுடன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

பலவாறாக கோஷங்களை எழுப்பியவாறு குறித்த கவனயீர்ப்பு நிகழ்வுகள் கடந்த 3 நாட்களாக நடைபெற்று வருகின்றன.

அத்துடன் சிறைக்கூடு மாதிரி அமைக்கப்பட்டு அதற்குள் இருவர் அமர்ந்து சிறை வாழ்க்கையை பிரதிபலிக்கும் நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

அகதிகள் என சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களை வெளிப்படையற்ற விசாரணையின்றி தடுத்து வைப்பது அடிப்படை மனிதாபிமான விழுமியங்களுக்கு எதிரானது. சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள் என எந்த வேறுபாடுமின்றி கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாழ்க்கை வாழும் இவர்களின் விடுதலை தொடர்பாக எந்தவித உறுதியான நடவடிக்கைகளையும் அவுஸ்திரேலிய அரசு எடுக்கவில்லை.

தற்போதைய நடைமுறையின் படி அகதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பாதுகாப்பு பரிசோதனை என்ற மதிப்பீட்டை அந்நாட்டின் புலனாய்வு அமைப்பான ஏ.எஸ்.ஐ.ஓ. மேற்கொண்ட பின்னர் அகதிகளுக்கான விசா வழங்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு மதிப்பீட்டில் ஒருவர் நிராகரிக்கப்பட்டால் அவர் காலவரையறையற்ற முறையில் தடுப்பு முகாமில் அடைக்கப்படுவர். அவர்களுக்கான மீள் விசாரணையோ மேல் முறையீடோ அனுமதிக்கப்படுவதில்லை.

இந்நடைமுறையால் தமிழ் அகதிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு பாதுகாப்பு மதிப்பீட்டில் நிராகரிக்கப்பட்ட நிலையில் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உட்பட சுமார் 55 ஈழத்தமிழர்கள் காலவரையறையற்ற முறையில் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

மூன்றாண்டுகளுக்கும் மேலாக எதிர்காலம் பற்றிய எதுவித நம்பிக்கையுமின்றி சாகும் வரை தடுப்பு காவலிலேயே வாழ்ந்த தழியும் நிலை மீது அதிருப்தி அடைந்த நிலையில் மெல்பேர்ன் முகாமில் தங்கியுள்ள 28 பேர் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கின்றார்கள். (அ)

# மெய்வல்லுநர் பயிற்சி முகாம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கான வதிவிட மெய்வல்லுநர் பயிற்சி முகாம் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 8 மணி தொடக்கம் மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் இல்ல விளையாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் கூடிய அடைவினைப் பெற்ற மாணவர்களை இப் பயிற்சிமுகாமில் தவறாது கலந்துகொள்ள அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-3-15)

# உறவினருடன் பொழுதை கழித்த சிறைக்கைதிகள்

(கொழும்பு)

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நேற்று உறவினர்களுடன் நாளை கழிக்க சிறைக் கைதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரதத் பல்லேகம தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் இந்நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

இதன்படி கைதிகளுக்கு வீட்டில் சமைக்கப்பட்ட உணவு வகைகளை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 2 ஆம் அருளப்பர் சின்னப்பருக்கு போலந்தில் சிலை அமைப்பு

(செஸ்டோசோவா)

உலகின் மிக உயரமான போப் இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு சிலை தெற்கு போலந்து நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.


திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் போலந்து நாட்டில் பிறந்தவர். அவரது நினைவை போற்றும் வகையிலேயே அந்நாட்டின் செஸ்டோசோவா நகரில் உள்ள ஜஸ்னா கோரா புனித தலத்தில் அவரது பிரமாண்ட சிலை அமைக்கப்பட்டுள்ளது.

பைபர் கிளாஸ் கண்ணாடியால் செய்யப்பட்ட 14 மீற்றர் உயரமுள்ள இந்த சிலை நகரை நோக்கி பார்ப்பது போல ஒரு குன்றின் மீது அமைக்கப்பட்டுள்ளது.

27 ஆண்டுகளாக திருத்தந்தையாக பதவி வகித்த இரண்டாம் ஜோன் போல் அருளப்பர் சின்னப்பர் கடந்த 2005ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

லெசெக்லைசன் என்ற பக்தர் தனது மகனை மரணத்திலிருந்து காப்பாற்றிய திருத்தந்தைக்கு நன்றி தெரிவித்து இச்சிலையை அமைத்து வருவதுடன் அதற்கு தேவையான சகல நிதியுதவிகளையும் அவர் வழங்கி வருகிறார். (அ-5)

# பயணிக்க முடியாத நிலையில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் புனரமைப்புக்காக போடப்பட்டுள்ள கற்களினாலும் சல்லியினாலும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்தோடு மிக விரைவாக குறித்த வீதியை புனரமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் குறித்த வீதி காணப்பட்ட நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வீதியின் ஓரமாக கற்களும் சல்லிகளும் கொண்டு வந்து பறிக்கப்பட்டுள்ளன.

வீதியின் ஓரமாக பறிக்கப்பட்ட சல்லி கற்கள் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியில் பரவப்பட்டு காணப்படுவதோடு மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளின் ரயர்களை பாதிப்படைய வைத்து வருவதோடு விபத்துக்களையும் ஏற்படுத்தி இடையூறு கொடுத்து வருகின்றது. மழைகாலத்தில் இந்த வீதியின் நடுவே ஏற்பட்டுள்ள பாரியளவிலான குழிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு பயணிக்க முடியாதவாறு மக்கள் அந்தரிப்பதையும் அவதானிக்க கூடியவாறுள்ளது.

எனவே யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை விரைவாக புனரமைத்து தந்து போக்குவரத்தை இலகுபடுத்துமாறு பயணிகளும் பிரதேச மக்களும் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (அ-6)

# கைக்குண்டு மற்றும் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சிலாபம் நகரில் வெளிநாட்டு தயாரிப்பிலான கைக்குண்டு மற்றும் ஒரு கிலோ கஞ்சா என்பவற்றை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிலாபம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து நேற்று முன்தினம் மாலை குறித்த நபரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் வெளியிடங்களில் இருந்து கஞ்சாவைக் கொண்டு வந்து சிலாபம் மற்றும் அண்டிய பிரதேசங்களில் கடந்த காலங்களில் விற்பனை செய்துள்ளதாகவும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# பாரியளவில் காணி அபகரிப்புடன் தொடர்புடையவர்கள் கைது

பாரியளவில் காணி அபகரிப்புடன் தொடர்புடையவர்களை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பாரியளவில் காணி அபகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காணி மோசடியில் ஈடுபட்ட 30 இற்கும் மேற்பட்ட குழுக்களை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத காணி அபகரிப்பு தொடர்பில் சுமார் 4 ஆயிரத்து 300 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே சில முறைப்பாட்டு விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் காணி உரிமையாளர்களது ஆவணங்கள் மோசடியான முறையில் மாற்றம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# துப்பாக்கி சூட்டில் மூவர் காயம்

புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் திஸ்ஸமாராகம கங்ஹசிறிபுரவிலேயே இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது பற்றவைக்கப்பட்ட வாணவேடிக்கை பக்கத்துவிட்டு கூரையின் மீது விழுந்தமையை அடுத்தே இருவீட்டாருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்தே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தெப்ரவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதியை உலக நீதிமன்றில் நிறுத்துக

## த.இ.கூட்டமைப்பினர் உண்ணாவிரதம்

தமிழீழம் மலரவும் ராஜபக்ஷவை உலக நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்கவும் கோரி தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பினர் சார்பில் நேற்று முன்தினம் சென்னையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

வடகிழக்கு இலங்கை ஜனாதிபதி மீது பன்னாட்டு விசாரணை நடத்தி தண்டனை வழங்க வேண்டும், தனித் தமிழீழம் மலர வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வள்ளுவர் கோட்டம் அருகே உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

கவிஞர் பொன்னடியான் உரையாற்றுகையில்,

இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு வேண்டுமா? தனி மாநிலம் வேண்டுமா? என்று பேசி முடிவெடுப்பது அடுத்த கட்ட நடவடிக்கை. முதல் நடவடிக்கையாக இலங்கையில் வாழும் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு வழங்கி அவர்களை நிம்மதியாக வாழ விட வேண்டும். கொங்கு தமிழருக்கு இன்னல்கள் விளைந்தால் சங்காசரம் நிகழும் என்று புரட்சி கவி பாரதி பாடினார்.

அதன்படி இலங்கை தமிழர்களுக்கு அமைதியான வாழ்க்கையை அமைத்து கொடுக்காமல் அவர்களுக்கு இலங்கை அரசு இன்னல்களை விளைவித்தால் தமிழகமே ஒன்று கூடி போராட்டம் நடத்துவோம்.

இலங்கை பிரச்சினை தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் எடுத்துவரும் நடவடிக்கைகளை இன்னும் துரிதப்படுத்த வேண்டும் என்றார்.

உண்ணாவிரத போராட்டத்தில் பல்வேறு தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கவிஞர்கள் கலந்து கொண்டனர். முடிவில் உண்ணாவிரதப் போராட்டத்தை திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் பழச்சாறு கொடுத்து முடித்து வைத்தார். (அ)

## வெப்பத்தை குறைக்க பொழிந்தது மழை

யாழில் நேற்று திடீர் கடும் மழை பொழிந்ததால் புதுவருடப்பிறப்புக் கொண்டாட்டம் சிறிது நேரம் சோபை இழந்து காணப்பட்டது. நேற்றைய தினம் ஆலயங்களில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. திடீர் என பெய்த மழையினால் சிறிது நேரம் அங்கு இடையூறு ஏற்பட்டது. எனினும் பிற்பகல் வேளையில் மழை பொழியாததையடுத்து புதுவருடப்பிறப்பு கொண்டாட்டம் அந்தி வேளையில் களைகட்டத் தொடங்கியது. எனினும் நேற்று பெய்த மழை அன்றாட நடவடிக்கையில் இடையூறு ஏற்படுத்தியிருந்தாலும் வெப்பத்தில் தகித்த யாழ்ப்பாணம் நேற்றைய மழையினால் குளிர்ந்தது. (அ-4)

# கடும் போக்குடைய அமைப்புக்கள் தடைசெய்யப்பட வேண்டும்

## வாசுவின் யோசனைக்கு எம்.பிக்கள் ஆதரவு

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் முயற்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஆதரவளித்துள்ளனர்.


கடும்போக்குடைய அமைப்புக்களை தடை செய்ய வேண்டுமென்ற யோசனைத் திட்டமொன்றை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

அதில் குரோத உணர்வுகளைத் தூண்டும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இது தொடர்பில் விசேட யோசனைத் திட்டமொன்றையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் சட்டத்தை உருவாக்குவதன் மூலம் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையை உறுதி செய்ய முடியும் என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசீ தெரிவித்துள்ளார்.

குரோத உ ணர்வைத் தூண்டும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவதனை தடுக்கும் யோசனைக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அறிவித்துள்ளது. (அ)

# சிறைக் கைதிகளின் விளையாட்டு நிகழ்வு



(குருமன்காடு)

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் உளநலன்களை பேணும் நோக்கில் தமிழ், சிங்கள புதுவருட பிறப்பை முன்னிட்டு கைதிகளுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. யானைக்கு கண்வைத்தல், முட்டி உடைத்தல், பாண் சாப்பிடுதல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டன்.

இந்நிகழ்வில் வவுனியா- அனுராதபுர பிரதேச சிறைச்சாலைகள் பொறுப்பதிகாரி உடுவர உள்ளிட்ட அதிகாரிகளும் கைதிகளின் உறவினர்களும் கலந்து கொண்டனர். (அ-250)

# முகத்தை வெண்மையாக்கும் கிறீம்களில் அதிகளவு பாதரசம்

## தோல்வியாதி ஏற்படும் என எச்சரிக்கை

இலங்கையில் விற்கப்படும் முகத்தை வெண்மையாக்கும் கிறீம்கள் சிலவற்றில் பாதரசத்தின் அளவு அதிகமாக இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கை, தாய்லாந்து மற்றும் சீனா ஆகிய நாடுகளில் உற்பத்தியாகும் இத்தகைய 40 வகையான கிறீம்களில் இந்த பாதரசத்தின் அளவு உரிய மட்டத்தைவிட அதிகமாக காணப்படுவதாக ஒரு சுற்றுச் சூழல் அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள இருவேறு ஆய்வுக் கூடங்களில் இதுகுறித்த ஆய்வுகள் நடத்தப்பட்டதாகவும் அவற்றின் மூலமே இந்த தகவல் தெரிய வந்ததாகவும் அந்த ஆய்வை நடத்திய சுற்றாடல் நீதிக்கான மத்திய நிலையம் கூறியுள்ளது.

இந்த ஆய்வு நடவடிக்கைகளை அந்த நிலை யத்தை சேர்ந்த ஹேமந்த விதானகே என்ப வர் நடத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து பிபிசி தமிழோசைக்கு தெரிவித்த இலங்கை சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர் தெரிவிக்கையில், இந்த இரசம் கூடிய கிறீம்கள் தோலில் உள்ள மெலனின் பதார்த்தத்தை வெளியேற்றி அதனை வெண்மையாக்குவதாகவும் அதேநேரம் அது தோலின் ஊடாக உடலினுள் நுழைந்து பல தோல்வியாதிகளை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையின் பின்தங்கிய பகுதிகள், மலையக தோட்டப் பகுதிகள் ஆகியவற்றில் குறைந்த விலையில் பெண்கள் மத்தியில் இந்த கிறீம்கள் பிரபலமாக விற்கப்படுவதாகவும் இவை குறித்து தாம் இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 கிராமசேவகர்கள் நியமனம்

(மல்லாவி)


முல்லை.மாவட்டத்தில் 10 பேருக்கு கிராம சேவகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற கிராம சேவையாளர் தரம் III இற்கான போட்டி பரீட்சையின் மூலம் தெரிவாகிய பரீட்சார்த்திகளுக்கே இக்கிராம சேவகர் நியமனம் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படுவதாக அரச நிர்வாக மற்றும் உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தி.பீ. அபயக்கோன் அறிவித்துள் ளார்.

எஸ். மேகலா (சிவனேஸ்வரி ஸ்ரோர், றெட்பானா, விசுவமடு), எஸ்.தர்சினி (கே. சின்னையா, 4 ஆம் வட்டாரம், புதுக்குடி யிருப்பு), ஜி.எஸ்.மேகலா (115/2, தொட்டியடி, விசுவமடு), எஸ்.மேகலா (மே/பா, எஸ்.சிவபாலன் தபாலகம், ஒட்டுசுட்டான்), என்.ஜெயசுதன் (37/1, வலதுகரை முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான்), எஸ். செந்தில்நாதன் (கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்), கே.கோமதா (கருவேலன் கண்டல் ஒட்டுசுட்டான் ), எஸ். ஸ்ரீபாலினி (கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம்), கே.நிரூபா (புளியங்குளம், ஒட்டுசுட்டான் ), என். லலிதா (இல.39, 3 ஆம் கண்டம், வலதுகரை கற்சிலைமடு) ஆகிய 10 பேருக்கே இந்நியம னம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு கடந்த முதலாம் திகதிமுதல் முல்லை. மாவட்டச் செயலகத்தில் 3 மாத பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

பயிற்சிக் காலத்தின் போது 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. பயிற்சி நிறைவின் பின் இவர்கள் வசிக்கின்ற பிரதேச செய[illegible] வழங்கப்பட[illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)



வவுனியா வைரவ புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் நேற்று விஜயவருட தேர்த்திருவிழா இடம்பெற்றதை படத்தில் காணலாம். (படம்: குருமன் காட்டுச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இருந்து விலகுவாரா காங்கிரஸ் தலைவி சோனியா?

(புதுடில்லி)

தனது பிள்ளைகளை அரசியல் களத்தில் ஈடுபடுத்துவதால் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அரசியலிலிருந்து விலகுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இந்திய செய்திகள் வெளியிட்டுள்ள செய்திகளில்,

கடந்த ஜனவரிமாதம் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் போது ராகுல் காந்திக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரியங்காவையும் அரசியலுக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளை சோனியா தற்போது தீவிரப்படுத்தியுள்ளார். சோனியாவின் திடீர் உடல் நலக் குறைவு பிரியங்காவை அரசியலில் குதிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் ராகுல், பிரியங்கா இருவரிடமும் ஆட்சி பொறுப்பையும் கட்சி பொறுப்பையும் சோனியா ஒப்படைத்துவிட்டு தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவார்.

உத்தர பிரதேசத்தில் உள்ள ரேபரேலி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சோனியா காந்தி எதிர்வரும் 2014



ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் போட்டியிட விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, எதிர்வரும் தேர்தலில் ரேபரேலி தொகுதியில் பிரியங்கா போட்டியிடலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (அ)

## கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு புரளி

தர்மபுரி மாவட்டத்தில் இரு நக்சலைட்டுக்கள் மறைந்து வாழ்வதாகவும் அவர்கள் சேலம் கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கவுள்ளனர் என பொலிஸாரிற்கு கிடைத்த கடிதத்தினால் கலெக்டர் அலுவலகம் சல்லடை போடப்பட்ட சம்பவம் சேலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

சேலம் மாநகர பொலிஸ் அதிகாரிக்கு ஒரு மர்ம கடிதம் வந்துள்ளது. அதில் சேலம் ரியல் எஸ்டேட் அதிபர் செல்வக்குமார் என்பவர் தர்மபுரி மாவட்டத்தில் இருந்து நக்சலைட்டக்கள் இருவரை அழைத்து வந்து மறைத்து வைத்துள்ளதாகவும் இவர்கள் சேலம் கலெக்டர் அலுவலகத்திற்கு வெடி குண்டு வைக்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பொலிஸார் செல்வக்குமாரை விசாரணைக்குட்படுத்தியிருந்தபோது அவர் அதனை மறுத்திருந்தார். எனினும் சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்குள் நுழைந்த பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 9.45 மணி முதல் இரவு 11 மணி வரை சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளனர்.

அங்கு வெடிகுண்டு எதுவும் காணப்படாத நிலையில் அது வெறும் புரளி என்பது தெரிய வந்தது. (அ-5)



இராமநாதபுரம் அண்ணா பல்கலை வளாகத்தில் மாணவர்களின் சாதனையாக கருதப்படும் வெற்று பிளாஸ்ரிக் போத்தல்கள் மூலம் கட்டப்பட்ட காவலர் அறையை படத்தில் காணலாம். உள் படம் மண் நிரப்பப்பட்ட காலி பிளாஸ்ரிக் போத்தல்கள்.

# டெசோ மாநாட்டை நடத்த தடை விதிக்கப்படுகின்றது

## தமிழகத்தில் நடப்பது காட்டாட்சி; வெதும்புகிறார் கருணாநிதி

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்காக டெசோ மாநாட்டை நடத்த மாநில அரசினால் தடை விதிக்கப்படுகின்றது.

எனவே இன்று தமிழகத்தில் நடப்பது நல்லாட்சியின் நடைமுறைகளா அல்லது காட்டாட்சியின் கொடுமைகளா என தி.மு.க தலைவர் கருணாநிதி கேள்விக் கணைகளை தொடுத்து முதல்வர் ஜெயலலிதா எவ்வாறு ஆட்சி நடத்த வேண்டும் என கற்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் கருணாநிதியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு காரசாரமாக கருத்து வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையே கேட்கமாட்டோம். இன்னும் சொல்லப் போனால் எதிர்க்கட்சி என்ற ஒன்றை இருக்கவிட மாட்டோம். அதை இல்லாமற் செய்ய முயற்சிப்போம் என்பதெல்லாம் ஜனநாயக அரசுக்கு அழகல்ல. கடந்த தேர்தலில் அ.தி.மு.கவின் தோழமைக் கட்சிதான் தே.மு.தி.க. தற்போது பிரதான எதிர்க்கட்சியாக உள்ள அக்கட்சி என்ன பாடுகிறது.

தே.மு.தி.கவுக்கும் தி.மு.கவுக்கும் தோழமை கிடையாதுதான். ஆனாலும் அ.தி.மு.க. அரசு தே.மு.தி.க மீது எடுக்கும் நடவடிக்கைகளை பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. ஜனநாயகத்தில் ஆளுங் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றையொன்று மதித்திட வேண்டும்.

தமிழகத்தில் என்ன நடைபெறுகிறது? நெருக்கடி நிலையா தமிழக மக்களின் நலன் கருதி ஆட்சியை பற்றியோ முதலமைச்சரை பற்றியோ யாரும் எதுவும் விமர்சித்து பேசக்கூடாதா?

என்ன கொடுமை இது? இங்கே என்ன இராணுவ ஆட்சியா சர்வாதிகார ஆட்சியா?

இலங்கை தமிழர்களுக்காக டெசோ மாநாடு நடத்த இந்த அரசினால் அனுமதி மறுக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தின் கருணையினால் அந்த மாநாடு நடைபெற்றது. இதெல்லாம் நல்லாட்சியின் நடைமுறைகளா அல்லது காட்டாட்சியின் கொடுமைகளா?

தற்போது எதிர்க்கட்சி என்ற ஒன்றே இருக்கக்கூடாது. இருந்தாலும் அதுதான் கடமையை ஆற்ற அனுமதிக்கக்கூடாது என்ற எண்ணத்தோடு காரியங்கள் நடத்தப்படுகின்றன.

ஜனநாயகத்தில் அரசியலை அரசியலாக சந்திக்க வேண்டுமே தவிர இதுபோன்ற நாகரிகமற்ற செயற்பாடுகளின் மூலமாகச் சந்தித்துச் சாதிக்கலாம் என்று நினைப்பது சரியல்ல என்பதே என் கருத்து.

ஜனநாயக மாண்புகளில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒன்றிணைந்து ஓங்கிக் குரல் கொடுத்திட அனைவரிற்கும் அழைப்பு விடுக்கிறேன் என தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# பிரதமரை காப்பாற்றவே சி.பி.ஐ. விசாரணை அறிக்கையை திருத்தியது

### சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

(புதுடில்லி)



நிலக்கரி ஊழல் புகாரில் இருந்து பிரதமரை காப்பாற்றவே சி.பி.ஐயின் விசாரணை அறிக்கையை அரசே திருத்தியது என்று பா.ஜ மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறினார்.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

விசாரணை நிலவரம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்ய இருந்த அறிக்கையை மத்திய சட்ட அமைச்சர் அஸ்வினி குமார் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் பரிசீலனை செய்து பல்வேறு திருத்தங்களை செய்ய சி.பி.ஐயை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது பற்றி சி.பி.ஐ. இயக்குநர் ரஞ்சித் சின்கா உள்ளிட்ட அதிகாரிகளை நேரில் வரவழைத்து அவர்கள் ஆலோசனை செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து அதில் சில திருத்தங்களை சி.பி.ஐ. செய்துள்ளது.

இவ்விடயத்தை நாளிதழ் ஒன்று நேற்று முன்தினம் அம்பலப்படுத்தியது. இது பற்றி பா.ஜ. மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான சுஷ்மா சுவராஜ் நேற்று முன்தினம் கூறுகையில்,

பிரதமர் மன்மோகன்சிங்கை காப்பாற்றுவதற்காகவே உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்ய இருந்த அறிக்கையை மத்திய அரசு திருத்தியுள்ளது. சி.பி.ஐயின் உள் விவகாரங்களில் மத்திய அரசு தலையிட்டுள்ளது முக்கியமான பிரச்சினை. இது கண்டனத்துக்குரியது என்றார். (அ)

## பாரதச் செய்தி

# நக்சலைட்டுக்களின் ஆதிக்கம் 26 மாநிலங்களில் உள்ளன

### மத்திய உள்துறை அமைச்சகம் தகவல்

80 சதவிகிதம் வன்முறையை சந்தித்துள்ள இந்தியாவின் 26 மாவட்டங்கள் நக்சல்களின் ஆதிக்கம் நிறைந்தவை என மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சதீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, பீகார், ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களை சேர்ந்த 26 மாவட்டங்கள் நக்சலைட்டுக்களின் வன்முறையால் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது.

இதுமட்டுமின்றி நாட்டில் உள்ள 64 மாவட்டங்களின் 270 பொலிஸ் நிலைய எல்லைக்குள் நக்சலைட்களின் வன்முறை தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 600 இற்கும் மேற்பட்ட மக்கள் நக்சலைட்களின் தாக்குதலுக்கு பலியாகியுள்ளனர்.

நக்சலைட்டுக்களின் தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலமாக சதீஸ்கர் முதல் இடம் வகிக்கிறது. இங்குள்ள பஸ்டர், பிஜப்பூர், தண்டேவாடா, கன்கர், கொண்டகவுன், நாராயண்பூர், ராஜ்நந்த்கவுன், சுக்மா மாவட்டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ள என மேலும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# முகேஷ் அம்பானியின் வீட்டுக்கு தாக்குதல் நடத்துவோம்

### தீவிரவாதிகள் மிரட்டல்

இந்தியாவின் பிரபல தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் வீடு மற்றும் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய முஜாஹிதின் அமைப்பினர் மிரட்டல் விடுத்துள்ளனர்.

முகேஷ் அம்பானி குஜராத்தில் அதிகமாக முதலீடு செய்து நரேந்திர மோடிக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ்வாறு மிரட்டல் விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து முகேஷ் அம்பானியின் அலுவலக அதிகாரிகள் முகேஷின் வீடான அண்டிலியா அமைந்துள்ள அல்டாமௌண்ட சாலையில் பொலிஸ் காவலரண் அமைக்க வேண்டும் என்று மும்பை பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

ஏற்கனவே அந்த பகுதியில் பாதுகாப்பு பணியில் உள்ள பொலிஸார் போதுமான வசதிகள் இன்றி சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் முகேஷ் அம்பானியின் வீட்டுக்கு மட்டும் பாதுகாப்பு அளிப்பதா அல்லது அப்பகுதி முழுமைக்கும் பாதுகாப்பு அளிப்பதா என்பது குறித்து முடிவு செய்வதில் பொலிஸாருக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் காவலரண் அமைப்பதில் மும்பை நகராட்சியிடம் முறைப்படி அனுமதி வாங்க வேண்டியுள்ளதால் பொலிஸார் குழம்பி போயுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் இரண்டும் நான்கு தான். அதையும் கூட ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துச்சொல்லுங்கள். -விட்டன் பர்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இரு தாரத்தான் படும்பாடுபோல இரு பஞ்சாங்கம் படுத்தும் பாடுபாரீர்

விஜய வருடப் பிறப்பின் நாட் கருமங்கள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில்,

வருடப்பிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் வாக்கியம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கங்கள் எங்களை படுத்தாப்பாடுபடுத்தி விடுகின்றன.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 13ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2013 அன்று இரவு 11.58 மணிக்கு விஜய வருடம் பிறக்கின்றது.

அதேநேரம் 14ஆம் திகதி ஏப்ரல் 2013 அதிகாலை 1.29 மணியளவில் விஜய வருடம் பிறப்பதாக திருக்கணித பஞ்சாங்கம் தெரிவிக்கின்றது.

இரண்டு பஞ்சாங்கங்களும் புத்தாண்டுப் பிறப்பின் நேரங்களை வெவ்வேறாக குறிப்பிட்டிருப்பது மட்டுமன்றி, இரண்டு பஞ்சாங்கங்களின் கணிப்புப்படி புத்தாண்டுப் பிறப்பின் லக்கனமும் மாறி விடுகின்றது.

இரண்டு பஞ்சாங்கங்களும் கூறுவதில் எது சரி என்று ஆராய்ந்தால் இரண்டும் சரியாக இருக்க முடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

வாக்கியம், திருக்கணிதம் ஆகிய இரு பஞ்சாங்கங்கள் கூறுகின்ற புத்தாண்டின் பிறப்பு நேரத்திரல் ஒன்று சரியானதாக இருக்க வேண்டும்.

அல்லது இரண்டும் பிழையாக இருக்க வேண்டும். எவர்தான் வாதிட்டாலும் இரண்டு நேரத்திலும் புத்தாண்டு பிறக்க முடியாது.

எனவே சரியான நேரம் எது?

எந்தப் பஞ்சாங்கம் சரியான நேரத்தை துல்லியமாகக் கூறுகிறது என்பதை அறிகின்ற உரிமை மக்களுக்கு உண்டென்பதை இரு பஞ்சாங்கத்து உரிமையாளர்களும் உணரக் கடவர்.

நாட்டில் எத்தனை பஞ்சாங்கங்களும் வெளிவரலாம். அவை கூறுகின்ற பலன்கள் வேறுபடலாம். ஆனால் புத்தாண்டு பிறக்கின்ற நேரம் நாட்காரியங்கள் ஆரம்பிக்கக்கூடிய சுப நேரங்கள் மாற்றம் அடையக்கூடாது என்பது நம் வாதம்.

ஒரு சாரார் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி நடக்க இன்னொரு சாரார் திருக்கணிதத்தை பின்பற்ற ஒரு புத்தாண்டின் பிறப்பு வேறுபட்ட நேரங்களில் வரவேற்கப்படுவது தமிழினத்தின் அசிரத்தைத் தன்மையை சுட்டி நிற்பதாகும்.

ஆக, இரண்டு தாரம் கட்டியவன் ஒரு பக்கத்தில் மனைவியையும் மறுபக்கத்தில் துணைவியையும் வைத்துக்கொண்டு படாப்பாடு படுவது போலத்தான் எங்கள் மண்ணில் இரு பஞ்சாங்கங்கள் இருவேறு நேரக்கணிப்புகளைக் கூறி மக்களைப் படுத்தாப்பாடு படுத்துகிறது.

இதற்கெல்லாம் முற்றுக்காண்பதில் புத்திஜீவிகள் முன்வரவேண்டும். இல்லையேல் பஞ்சாங்கம் பார்க்கும் பழக்கமும் சுபநேரங்களில் மங்களகரமான நிகழ்வுகளை செய்கின்ற எங்கள் பண்பாடும் பழுதாகிப் போகும்.

ஆகையால் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களின் உரிமையாளர்கள் ஒருதடவையேனும் சந்தித்து சிந்திப்பது நல்லது.

நாங்கள் சந்திக்கவும் மாட்டோம், சிந்திக்கவும் மாட்டோம் என்றால் பொருத்தம் பார்க்கும் பஞ்சாங்கங்கள் பொருத்தமற்றவை என்ற முடிபை எடுக்க வேண்டி வரும்.

# சமுர்த்தி கொடுப்பனவு வழக்கப்படாமையினால் புத்தாண்டில் பயனாளிகளுக்கு ஏமாற்றம்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பின்தங்கிய கிராமங்களில் இருந்து சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுவதற்காக நேற்று முன்தினம் கொட்டும் மழையில் நனைந்தபடி காத்திருந்த மக்களுக்கு பணக் கையிருப்பு தீர்ந்துவிட்டதாகக் கூறி திருப்பி அனுப்பப்பட்டதனால் பல்வேறு அவலங்களுடனும் ஏமாற்றங்களுடனும் மக்கள் வீடு திரும்பினர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஏறக்குறைய 2 ஆயிரம் சமுர்த்திப் பயனாளிகள் உள்ளனர்.

இவர்களுக்கு கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களிற்கான கொடுப்பனவு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வழங்குமாறு வடக்கு மாகாண சமுர்த்தி ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்டதற்கு அமைய வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே இவ்வாறு இங்கு பணக் கையிருப்பு முடிந்து விட்டதாக கூறப்பட்டது.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 6 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என எதிர்பார்த்து சித்திரை வருடப் பிறப்பனை குடும்பத்துடன் மகிழ்வாகக் கொண்டாடலாம் என நினைத்து வந்த மக்களுக்கு அதிர்ச்சியையே பரிசாக வழங்கியுள்ளனர். இந்நடவடிக்கையில் குறிப்பாக ஐயங்கன்குளம், புற்றுவெட்டுவான், பழைய முறிகண்டி உட்பட பல பின் தங்கிய கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக அரசு முழுமையான பணத்தை வங்கிகளுக்கு அனுப்பியிருந்து போதும் துணுக்காய் பிரதேச செயலக அதிகாரியொருவர் பணத்தை முழுமையாக வங்கியிலிருந்து எடுத்து வராமல் பகுதி பகுதியாக எடுத்து வந்து விநியோகம் செய்யுமாறு உத்தரவிட்டமையாலேயே இவ்அவல நிலை தோன்றியுள்ளது.

வங்கி விடுமுறை தொடர்ச்சியாக இருப்பதன் காரணத்தினால் இன்று திங்கட் கிழமை வரை சமுர்த்திப் பயனாளிகளுக்கு இக்கொடுப்பனவு கிடைக்கப்படமாட்டாது என்பது குறிப் பிடத்தக்கது. (செ-3,15)

# பாடகர் பி.பீ.ஸ்ரீனிவாஸ் சென்னையில் காலமானார்

(சென்னை)

பழம்பெரும் திரைப்பட பின்னணிப் பாடகர் பி.பீ.ஸ்ரீனிவாஸ் சென்னையில் காலமானார். தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு உட்பட பல இந்திய மொழிகளில் அவர் மிகவும் இனிமையான பாடல்க்ளை பாடியிருக்கிறார்.

அதேவேளை தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், ஹிந்தி, உருது, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய எட்டு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராகவும் அவர் திகழ்ந்தார்.

தமிழ் திரைப்படங்களில் இவர் பாடிய பாடல்கள் காலத்தால் அழியாதவையாக இன்றும் திகழ்கின்றன. ஆந்திராவில் காக்கிநாடாவில் இவர் பிறந்தார். இவரது இயற் பெயர் பிரதிவாதி பயங்கரா ஸ்ரீனிவாஸ் ஆகும்.

1952ஆம் ஆண்டு மிஸ்டர் சம்பத் என்ற ஹிந்திப்படத்தின் மூலம் தனது திரைஇசைப் பயணத்தை ஆரம்பித்த ஸ்ரீனிவாஸ்அவர்கள்1955ஆம்ஆண்டில்



மலையாளத்தில் ஹரிச்சந்திரா என்ற படத்திலும் அடுத்துப் பாடினார்.

முதலாவது பிரபலமான பாடலாக இது கூறப்படுகிறது. தமிழில் ஜெமினி கணேசனுக்கு அதிகமான பாடல்களை பாடிய அவர் முத்துராமன், ரவிச்சந்திரன், ஏவி எம் ராஜன் போன்ற நடிகர்களுக்கும் பின்னணி பாடியிருக்கிறார்.

கன்னட உலகின் சுப்பஸ்ரார் எனக் கருதப்படும் ராஜ்குமாருக்கும் அதிகமான பாடல்களை இவரே பாடியிருக்கிறார். பல பக்திப்பாடல்களும் இவரது பங்களிப்பில் அடங்குகின்றன.

பல இசை குறித்த அமைப்புகளுக்கும் இவர் தலைமைதாங்கியிருக்கிறார். தமிழ் புதுவருடமான ஏப்ரல் 14ஆம் திகதி நேற்று காலமான அவருக்கு இறக்கும் போது வயது 82 என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# குஞ்சுப்பரந்தனில் முன்பள்ளி குறைபாடு

## சீர் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

தற்போது முன் பள்ளிகள் கல்வியில் பிரதான இடத்தினை வகிக்கின்றது என்ற போதிலும் குஞ்சுப்பரந்தன் பகுதியில் உரிய முறையில் முன்பள்ளி இல்லாமல் அங்குள்ள முன்பள்ளி சிறார்கள் ஆரம்பக்கல்வியை கற்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இவற்றைதட்டிக்கேட்பதற்குஉரியபொது ஸ்தாபனங்களோ, யாருமோ இங்கு இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து இப் பகுதியில் முன்பள்ளி நடைபெறுவதற்கு உதவ வேண்டும் என்று கல்வி சமூகத்தில் ஆர்வமுள்ளவர்களால் இக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக இதனை வெளிக் கொண்டுவந்து இம் மக்களுக்கு உதவ வேண்டும் என்பதில் கரைச்சி பிரதேச செயலரும் ஆர்வம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-3,254)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதனின் சிறப்பு



உலகிலுள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்கநிலை மனித உருவம். எல்லாம்வல்ல இறை நிலையை முழுமையாக எடுத்துக் காட்டும், பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

உடலுக்குள் உயிர், உயிருக்குள் அறிவு, அறிவுக்குள் அருட்பேராற்றலின் இயற்கை (மெய்ப்பொருள்) இவ்வாறு ஒன்றில் ஒன்றாக நிலைகொண்டு மனித உரு சிறப்பாக, வியத்தகு நிலையில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. உடல் குறிப்பிட்ட அளவு பருமனால் எல்லை உடையது. உயிரானது நுண்ணியக்க மூலக்கூறான விண் எனும் நுண்துகள்கள் கோடிக் கணக்கில் ஒன்றிணைந்து ஒரு தொகுப்பாக இயங்கும் ஆற்றல். இந்த உயிரானது உடலுக்குள் சுருங்கவும் உடலுக்குப்புறத்தே தக்க அளவு விரியவும் கூடியது.

அறிவு என்பது உயிரை மையமாகக்கொண்ட மெய்ப்பொருள். உடல்மூலம் ஆற்றிய வினைகளினால் பெற்ற அனுபவம், சிந்தனை ,கற்பனை இவற்றிற்கேற்ப விரிந்தும் சுருங்கியும் செயல்புரியும் ஆற்றலுடையது. அறிவில் அடங்கியுள்ள இரகசியங்கள் எண்ணி அறிய முடியாதவை. எல்லாம் வல்ல முழுமுதற்பொருளான மெய்ப்பொருளுள் உயிராற்றலை மையமாகக்கொண்டு தனது அசைவினாலும் உணர்வாலும் ஆற்றிய வினைப்பதிவுகள் அனைத்தும் அடக்கம் பெற்ற கருவூலம் அறிவு ஆகும். இது உயிர்த்துகளின் மையத்தில் தொடங்கி உயிர்த்துகள் தற்சுழற்சியால் விளையும் ஜீவகாந்தசக்தி மூலம் உடல் வரையிலும் மேலும் உடலுக்கு வெளியே புலன்கள்மூலம் உணரும் பொருட்கள் வரையிலும் யூகத்தால் பேரியக்க மண்டலம், அதற்கப்பால் நிலைத்த சுத்தவெளி எனக் கருதப்படும் மெய்ப்பொருள் வரையிலும் விரிந்து சுருங்கும் இயல்புடையது.

எல்லாம்வல்ல மெய்ப்பொருளே சுத்தவெளியாகவும் மெய்ப்பொருளாகவும் விண்முதல் மண்வரையிலான பஞ்சபூதங்களின் இணைப்பால் ஆகிய பேரியக்க மண்டலத் தோற்றங்கள் அனைத்திலும் இயக்க ஒழுங்காகவும் உயிர்களிடத்தில் புலனுணர்வாகவும் மனிதனிடத்தில் எல்லாமாக இருக்கும் தன் முழுமையை உணரும் பேரறிவாகவும் இருக்கிறது. இந்த நான்கு தத்துவங்களும் ஒன்றிணைந்த மாபெரும் வல்லமையுடைய அறிவிலும் செயலிலும் சிறந்ததோர் உருவம் மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர் நலனுக்கான மொத்தக் குரலாய் தமிழகமெங்குமுள்ள ஒரு கோடியே 65 இலட்சம் மாணவர்கள்... கல்லூரிகள் மூடப்பட்டாலும் தங்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகின்றனர். போராட்டத்தின் 15 ஆவது நாளான கடந்த ஞாயிறன்று சென்னை மெரினா கடற்கரையில் உலகத் தமிழ் அமைப்பு மாணவர்கள் , பொறியியல் மாணவர்கள் இணைந்து பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு நடத்தினர்.

மாலை 6 மணியளவில் இவர்கள் பொலிஸாரால் விரட்டியடிக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு, தமிழீழத் திற்கான மாணவர் போராட்டக்குழு. என்று இரு அமைப்புக்களின் ஒருங்கிணைப்பில் மாணவர் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களைக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. இதுதவிர இந்த இணைப்பில் வராத உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் பாலிடெக்னிக் மாணவர்களும் பரவலாய் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மாணவர் கூட்டமைப்பு சார்பில் திருச்சியில் 22 ஆம் திகதி சட்டம், பொறியியல் , கலை, அறிவியல் என 60 கல்லூரிகளின் மாணவப் பிரதிநிதிகள் பங்கேற்று இலங்கைத் தமிழர் நலன் தொடர்பாகவும் இந்திய அரசை கண்டித்தும் 13 முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர்.

கலால் வரி, வருமான வரி கட்டுவதையும் மறுப்ப தோடு மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு அதற்கான கட்டணம் செலுத்தாமல் புறக்கணிப்பது... ஏப்ரல் முதலாம் திகதிக்குள் இலங்கை தூதரகத்தை மூடவேண்டும். இல்லையென்றால் தமிழகம் முழுவதும் மாணவர்களைத் திரட்டி முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்பது உள்ளிட்ட பல இரகசிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு நாள் போராட்ட அறிவிப்பும் அதன் முன் தினத்தில் எஸ்.எம்.எஸ். மூலமாக மாணவர்களுக்கு தெரிவிக்கப்படும் என்ற நிலையை மாணவர்கள் கையிலெடுத்திருப்பதால் அவர்களின் வியூகம் வெளியே தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள் பொலிஸார்.

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு சார்பில் மாணவர் வேற்று ஆதரவு தெரிவித்து வருகின் றார்கள். ஐ.பி.எல். என்ற பேரில் இங்கே வருகின்ற இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கப் போவதில்லை என்பதும் ஒருமுக்கிய முடிபு. இன்னும் 4 மாதம் கழித்து ஐ.நா. சபை கூடவிருக் கொண்டவர். அவருடைய இந்த முடிபு ஏற்புடையதல்ல. பாலகன் பாலச்சந்திரனின் படம் வெளியான பின்னர்தான் விக்ரம் தமிழ், தமிழீழம் தொடர்பான நடவடிக் கைகளில் வேகம் காட்டினார். ஈழம் தொடர்பான அனைத்துக் கூட்டங்களி நிற்கின்றது. பண்புள்ள தமிழ்ப் பற்று மிக்க ஒரு போராளி நண்பனை இழந்து விட்டேன் என்று கண்கலங்கினார்.

விக்ரமின் பூர்வீகம் ஆந்திர மாநிலம் நெல்லூர் ஆகும். தந்தை ராமசாமி நாயுடு இளவயதிலேயே இறந்துவிட... சென்னை நெற்குன்றத்தில் இருந்த

# ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம்!

## மாணவர்கள் முடிபு!




ஜோபிரிட்டோ கல்லூரிகள் திறக்கப்பட்டாலும் எங்களின் போராட்டம் படிப்பை பாதிக்காத வகையில் தொடரும். இப்போதைக்கு எங்களுடைய இலக்கு அனைத்து மாணவர்களையும் மிக வலுவாய் ஒருங்கிணைப்பதில் தான் இருக்கின்றது. எங்கள் போராட்டம் பல வடிவங்களில் பல நிலைகளில் இருந்து வீறிட்டுக் கிளம்புவதை யாராலும் தடுக்க முடியாது. பல ஆயிரம் மாணவர்கள் களத்தில் உள்ளனர். பல சிந்தனைகள் கை கோர்த்து களத்தில் நிற்கின்றது. சமூக விரோதச் செயல்களோ சட்டத்துக்கு எதிராகவோ எங்கள் போராட்டம் ஒருபோதும் அமையாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம் கையிலிருக்கின்றது என்றார்.

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்ட்மைப்பின் ஒருங்கிணைப்பாளர் தினேஷ் கூறுகையில்,

உணர்வு மிக்க எங்கள் சகோதர மாணவர்கள் முழுமையாகப் போராட்டங்களை வர கின்றது. அப்போது இலங்கைக்கெதிரான நிலைப்பாட்டை இந்தியாவே எடுக்கும் படியாக எங்களது இன்றைய போராட்டங்கள் அமையும். இலங்கைக் கெதிரான ஒரு தீர்மானத்தை ஐ.நாவில் இந்தியாவே கொண்டு வந்து எங்கள் போராட்டத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும் என்று நம்புகிறோம் என்கிறார் தினேஷ். மாணவர் போராட்டங்கள் இப்படி பல நிலைகளில் தீவிரமடைந்து கொண்டிருக்கின்ற வேளையில் விக்ரம் என்ற இளைஞர் கடந்த 21 ஆம் திகதி தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பது பெரும் அதிர் வலையை ஏற்படுத்தியி ருக்கின்றது.

சென்னை நெற்குன்றம் தமிழர் விடுதலை இயக்கம் சார்பில் நடந்த திறந்தவெளி கருத்தரங்கு முடிவுரையின்போதுதான் விக்ரம் தீக்குளித்து இறந்திருக்கிறார். இயக்க செயலாளர் பாரத் குமாரை சந்தித்து பேசினோம்.

விக்ரம் மிகவும் அமைதியான சுபாவம் லும் பங்கேற்க ஆரம்பித்தார். 10 இளைஞர்களை மட்டுமே கொண்டு தமிழர் விடுதலை இயக்கம் தொடங்கினோம். அதன் முதல் கூட்டத்திலேயே இப்படி விக்ரம் பலியாகிவிட்டார் என்றார் சோகமாக

அமைப்பின் தலைவரான சுபாஷ் சந்திரபோஸ் என்னுடைய நண்பர் ஜஸ்டின் மூலமாக புலிகள், ஈழம், தமிழர் போராட்டப் பின்னணி, வரலாற்று உண்மைகள் என ஒன்றுவிடாமல் கேட்டுத் தெரிந்து கொள்வதில் கடந்த 15 நாட்களாக அதிக தீவிரம் காட்டினார் விக்ரம்.

கூட்டத்தை முடித்து வைத்து நன்றியுரைக்கு நான் தயாரான நேரத்தில் திடீரென வேண்டும் வேண்டும் தமிழீழம் வேண்டும். ஐ.நாவே பொது வாக்கெடுப்பு நடத்து. தமிழர்களைக் காப்பாற்று என்று கதறியபடி எரிந்து கொண்டே மேடையை நோக்கி ஓடிவந்து விக்ரம் கீழே விழுந்த கொடூரம் கண் முன்பாக அப்படியே சித்தி வீட்டுக்கு வந்த விக்ரம். அங்கேயே தங்கிவிட்டார். பெங்களூருவில் குடியேறும் திட்டத்தோடு குடும்பத்தினர் விக்ரமை அழைத்துப்போக அங்கே கன்னட அமைப்பினர் தமிழருக்கெதிராக திர ண்டதைக் காணப் பொறுக்காமல் இவர் மட்டும் சென்னைக்குத் திரும்பியிருக்கிறார்.

விக்ரமின் தாயார் கங்காபாய் நம்மிடம் தமிழும் தெலுங்குமாய் கலந்து பேசினார்.


ஒரே பிள்ளைப்பா பொண்ணு ஒண்ணு இருக்குது. பெங்களூருல கட்டிக் குடுத்துருக்கேன். இவனுக்குப் பொண்ணு பார்த்துக்கிட்டிருந்தேன் இப்படி பண்ணிக்கினானே என்றார் வேதனை கலந்த குரலில். மாணவர்களும் இளைஞர்களும் உக்கிரத்துடன் களத்தில் நிற்பது தமிழர்களின் எதிரிகளுக்கு பெரும் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

***(தமிழகத்தில் இருந்து வெளிவரும் நக்கீரன் இதழிலிருந்து.)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தாவிடம் பணிந்தது சன்ரைசர்ஸ்



சன் ரைசர்ஸுக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். சீசன் 6 கிரிகெட் திருவிழாவின் நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா அணி சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின முன்னதாக நாணயச்சுழச்சியில் வென்ற கொல்கத்தா அணியின் அணித்தலைவர் காம்பீர் முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தார்.

இதனையடுத்து களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, சன் ரைசர்ஸ் அணியை 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

முன்னதாக கொல்கத்தா சார்பில் பிஸ்லா 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும் காம்பீர் 45 பந்துகளில் 53 ஓட்டங்களையும் கலிஸ் 27 பந்துகளில் 41 ஓட்டங்களையும் மோர்கன் 21 பந்துகளில் 47 ஓட்டங்களையும் விட்டு கொடுத்து ஒரு விக்கெட்டையும் ஷர்மா 2 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைவிட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் சார்பில் கமிரன் லயிட் 31 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பார்த்திவ் பட்டேல் 27 ஓட்டங்களையும் பெரார 25 பந்துகளில் 36 ஓட்டங்களையும் எடுத்தனர். கலிஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டையும் பாட்டிய 4 ஓவர்களை பந்துவீசி 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டையும் வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் தெரிவானார்.

# பஞ்சாப்பை வீழ்த்தியது ராஜஸ்தான்



பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

ஐ.பி.எல். சீசன் 6 கிரிக்கெட் திருவிழாவில் ஐதராபாத்தில் நடைபெற்ற 18 வது லீக் போட்டியில் பஞ்சாப் அணி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

முன்னதாகநாணச்சுழற்சியில்வென்றராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் அணித்தலைவர் டிராவிட் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணி 18.5 ஓவர்களில் 10 விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக பேயில் ஹசி 41 ஓட்டங்களை பெற்றார்.

பின்னர் 125 ஓட்டங்களைவெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகராக ராஜஸ்தான் அணியின் ஜேம்ஸ் பாக்னர் தெரிவானார்.




# பிரதேச செயலக விளையாட்டு விழா

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக விளையாட்டு விழாவின் தடகளப் போட்டிகள் இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைதினம் இருபாலாருக்குமான 5ஆயிரம் மீற்றர் ஓட்டமும் ஏனைய பதினைந்து விளையாட்டுக்களும்

நாளைதினம் இருபாலாருக்குமான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டம்

சென்னை சுப்பர் கிங்ஸ்

Vs இரவு :- 8.00 மணி

புனே வாரியர்ஸ் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்...

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகளில் சற்று சுறுசுறுப்புக் காணப் படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரை சென்றோம். சந்தைப் பகுதிகளில் மக் கள் கூட்டம் இருந்தது. இருப்பினும் அவர்கள் மத்தியில் ஒரு சகஜமான வாழ்க்கை சூழல் இல்லை என்பதை காண முடிந்தது. இன்ன மும் ஒருவித அச்ச உணர்வு அவர்களிடம் உள்ளது.

தமிழர்கள் வசிக்கும் பகுதியில் முன்பிருந்த நிலை தற்போது இல்லை. மாறிக் கொண்டே வருகிறது. தமிழர் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றமும் அதிகமாக உள்ளது.

தங்களின் விளை நிலங்களை எல்லாம் சிங்களவர்கள் கைப்பற்றுவதாக தமிழர்கள் புகார் தெரிவிக்கின்றனர். இந்தியாவின் நிதி உதவியுடன் கட்டப்படும் வீடுகளை பார்த்தோம். ஓரளவு கட்டித் தந்துள்ளனர். மற்றபடி சொல் லக்கூடிய அளவுக்கு சிறப்பாக பணிகள் எது வும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இலங்கையில் போர் முடிந்து 4 ஆண்டு கள் ஆனாலும் தமிழர் பிரச்சினை அப்படியே உள்ளது. அங்குள்ள நிலைமைகளை பார்க் கும் போது தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவது முற்றிலும் சந்தேகமே.

அதிகாரங்களை அளிக்க இலங்கை அரசு மிகுந்த தயக்கம் காட்டுவதாகவே தெரிகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த மாதம் தேர்தல் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அதுவும் நடக்கவில்லை செப்ரெம்பர் வரை அந்தத் தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரம், நில உரிமை அதிகாரம் போன்றவை தமிழர்கள் பிரச்சினைகளை ஓர ளவு தீர்க்க உதவும். ஆனால் இந்த இரண் டையும் இலங்கை அரசு தரவே தராது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

- தமிழர் பகுதிகளுக்கு மாகாண அரசியல் அதிகாரம் வழங்குவது குறித்து பேச்சுவார்த் தை நடத்துவதாக இலங்கை அரசு சொல்கிறது. ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ் தலைவர்கள் பங்கேற்க மறுக்கின்றனர். இலங்கை அரசு காலம் கடத்தும் வேலையை செய் வதாகவும் குறை கூறுகிறார்கள். அங்கு நடந்த போரின்போது நடந்த அத்துமீறல் குறித்து விசாரிக்க இலங்கை அரசே குழுவொன்றை அமைத்தது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கூட நிறைவேற்ற இல ங்கை அரசு ஆர்வம் காட்டவில்லை என அவர் கூறினார். (செ)


கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்....

## றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)

**A/L 2015**

ஆரம்பம்: ஏப்ரல் 16 மாலை 3.00 மணி

வர்த்தகப்பிரிவு

- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு

- தமிழ் — பத்மநாதன்
- புவியியல் — பாபு
- இந்துநாகரிகம் — ஸ்ரீஸ்
- நாடக அரங்கியலும் — சிவா
- ஊடகவியல் — மனோ
- அளவையியல் — E.S. பவன்
- அரசியல் — சுகாஷ்
- வரலாறு — R.S. சந்திரன்
- ஆங்கிலம் — சந்திரபவுலி

2014 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன



தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் சுயமாக கற்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட நூலும் DVDயும் விற்பனையாகிறது.

**புலமைப்பரிசில் வழிகாட்டி விளக்கம் 2013 - 2014**

வினாத்தாள் I இல் 100% மதிப்பெண்களைப் பெறுவதற்காக 1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான கற்பித்தல்

நூல் + DVD = 850/-

**கிடைக்கும் இடங்கள்:-**

1. அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
3. சிறிலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
4. துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
5. சிறி முருகன் புத்தகசாலை - பண்டத்தரிப்பு
6. சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
7. சாலினி புத்தகசாலை - அச்சுவேலி
8. பொதிகை புத்தகசாலை - சாவகச்சேரி
9. புதிய அருள்நாயகி புத்தகசாலை - கொடிகாமம்

(2269)



அமெரிக்காவில்
கனடாவில்
நியூசிலாந்தில்
சைப்பிரஸில்

படிக்க உழைக்க

அரைவாசிக் கட்டணத்துடன் சட்ட ஆலோசனை

ஏழு நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

(சி-2985)


# உறவில்...

ராஜதந்திர உறவுகள் நிலவுகின்ற நிலையில், அது எந்தவிதத்திலும் பாதிப்படையாது என்று இந்தியாவின் வெளிவிவகாரத்துறை அமைச் சின் பேச்சாளர் சஹிட் அக்பாருடீன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளினதும் தொடர்புகள் இரு தரப்பினரும் நலன்களுக்காகவே பயன் படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தியாவின் தலையீட்டு டன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை புதிய அணுகுமுறையுடன் முன்னெடுக்கவுள்ள தாகவும் பேச்சாளர் சஹிட் அக்பாருடீன் அறிவித்துள்ளார். (செ-11)

# இலங்கைக்கு...

டுபாயில் உள்ள அலுமினியத் தொழிற் சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 இலங்கை அகதிகளில் லோகினி ரதிமோக னும் ஒருவர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வர்கள் என்ற சந்தேகத்தில் சொந்த மக்கள் மீது துன்புறுத்தல்களை மேற்கொள்ளும் இலங்கைக்கு இவர்கள் திருப்பி அனுப்பப்படு வதற்கான பேச்சுக்கள் நடைபெறும் இந்த வேளையில் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பாது தனக்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்குமாறு செய்தி வாசிப்பாளராக கடமை யாற்றிய லோகினி ரதிமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நான் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட் டால் அங்கு நான் கொலை செய்யப்படுவேன். என்னுடன் பணி புரிந்த பலர் இலங்கை அர சாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

செய்தி வாசிப்பாளராக கடமையாற்றிய இசைப்பிரியா போரின்போது பாலியல் வன் புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என லோகினி தொலைபேசி மூலம் த இன்டிப்பென்டன் ஊடகத்திடம் தனது இக்கட்டான நிலைப்பாட்டை விபரித் தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட் டில் இருந்த பகுதிகளில் ஒளிபரப்பப்பட்ட தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் இசைப் பிரியா பிரதான செய்தி வாசிப்பாளராக பணி புரிந்தார். இவர் மே 18 அல்லது 19, 2009 அன்று இலங்கை இராணுவத்தினரால் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கான போர்க் குற்ற சாட்சியங்கள் காணப் படுகின்றன.

தமிழீழ தேசிய தொலைக் காட்சி யில் ஹரிணி மற்றும் கனி போன்ற புனை பெயர்களில் செய்திகளை வாசித்த லோகினி,

தான் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் இசைப்பிரியா போன்று சித்திரவதை செய்யப்பட்டு படுகொலைக்கு உள்ளாகலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளார். (செ-11)


கிராம அலுவலர் தரம் III இற்கான போட்டிப் பரீட்சையை முன்னிட்டு வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு - 01

**வெளிவந்து விற்பனையாகிறது**

யாழ். நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வடமாகாணத்தின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்

தொகுப்பாசிரியர் சி.என்.எச்.சாள்ஸ்

30/- மட்டுமே

தொடர்புக்கு : 0776913337



FALC **FRENCH LANGUAGE CENTRE**

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

**FRENCH CLASSES**

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..

ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P. 0779 789 456

ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...


# என்னுடன் [...] மகிந்தவுக்கு [...]



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ [...] அரசியல் ரீதியாக நேருக்கு நேர் சந்[...] அஞ்சுவதாக முன்னாள் இராணுவ[...] சரத் பொன்சேகா தெரிவித்துள்ளா[...]

யுத்தத்தின் பின்னர் இலங்கை[...] கிய விடயங்கள் குறித்து கவனம் [...] படவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் மற்றும்[...] களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் [...] களுக்கு அரசாங்கம் எவ்வித நட[...] களும் எடுக்கவில்லை.

அத்துடன் நாட்டில் அண்மைக்[...] முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்[...] பட்டுள்ள வன்முறைகள் குறித்து[...] வின் அரசாங்கம் எந்தவித நட[...] களும் எடுக்கவில்லை என சரத் பொ[...] குற்றம் சுமத்தியுள்ளார்.

# 18 ஆயிரம் சிங்க[...]

விசேட குழு ஒன்றை அமைப்பது[...] பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் [...] இலட்சம் பெறுமதியான வீடுகளை[...] த்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு[...]

இந்த வீடமைப்பு வேலைகளை[...] முறைப்படுத்துவதற்கான அதிகா[...] வீடமைப்பு அதிகார சபையினருக்கு[...] வது தொடர்பாகவும் இக் கலந்துரைய[...] கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் கிளிநொச்சி, முல்[...] தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில்[...] வாறு பெரும்பான்மை இனத்தவர்[...] சிங்களவர்களை குடியமர்த்துவதற்[...] மிடப்பட்டுள்ளது.

இதற்கு இப் பகுதிகளில் உள்ள அரச[...] களை பயன்படுத்துவது எனவும் தீர்மா[...] பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (செ-11)

# ஜனாதிபதி மகிந்[...]

ஜனாதிபதியின் செயலக வட்டாரங்கள் [...] படுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் [...] குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஜ[...] பிங் அண்மையில் பதவியேற்றுள்ள நிலை[...] ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இ[...] யம் அமையவுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு சர்[...] ரீதியில் பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்க[...] வரும் நிலையில், சீனாவிடம் இருந்து[...] திக உதவிகளை கோர ஜனாதிபதி மகிந்[...] பக்ஷ முடிவு செய்துள்ளதாக தெரியவருகி[...]

குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜ[...] பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை இ[...] பின்னர் நாட்டின் ஏற்றுமதி வீழ்ச்சி கண்டுள்[...]

இந்நிலையில், சீனாவுடன் சுதந்திர[...] தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதிலும் அ[...] டிடம் இருந்து ஜி.எஸ்.பி வரிச் சலுகை[...] பெற்றுக் கொள்ளவும் இலங்கை அரச[...] முயற்சித்து வருகின்றது.

இது தொடர்பில் இவ்விரு நாடுகளு[...] இடையில் ஆரம்பக் கட்டப் பேச்சுவார்[...] கள் இடம்பெற்று, சாதகமான சமிஞ்ஞை[...] காட்டப்பட்டதாக தெரியவருகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜ[...] வின் சீன விஜயத்தின்போது, இவ்விடயா[...] தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் நம்பப்படுகின்றது. (செ[...]




நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்[...]



பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறைவீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்பா[...]
0773818799

PAVING STONES

பல்வேறு வடிவமைப்புக்களைக் கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, கிளிநொச்[...] ஆகிய மூன்று இடங்களில் உள்ள காட்சியறைகளில் பார்வை இடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்[...]